மாலைமணி

ஆசிரியர்: பி.எஸ்.இளங்கோ

முனுசாமி தரும் திட்டங்களைக் கண்டு அமைச்சர்களே திகைக்கிறார்கள்!

13 ஆண்டுகளாக இருந்துவரும் தண்ணீர் பஞ்சத்தைப் போக்க நம்மால் தான் திட்டம் தர முடிந்தது!

மாடமாளிகைக்காரர்கள் வரி கொடுககாது ஏமாற்றி வந்தார்கள்!

நாம் அதைக் கண்டுபிடித்து வரியை உயர்த்தினோம்!

அன்று கௌன்சிலர்களையே பார்த்திராத மக்கள் இன்று கைத்தட்டிக் கூப்பிடுகிறார்கள்!

சென்னையில் பேரறிஞர் அண்ணா முழக்கம்!



சென்னை 99வது வட்டம் அடையாறுக்கருகிலுள்ள கோட்டூர் கலைமன்றத்தின் ஆண்டுவிழா 19-5-6[illegible]ம் தேதி மாலை நடைபெற்றது. இந்தக் கிராமம் நகரத்தின் எல்லையிலுள்ளது. இந்த வட்டத்தில் நகர மன்றத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகச்சார்பாக உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது அறிந்ததே.

கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன் டேப்ராதா மாணிக்கம் இன்னிசை பாடினார்கள்.

தோழர் சி. ராமச்சந்திரன் கூட்டத்திற்குத் தலைமை வகித்து மன்றத்தின் சேவைகளைப் பற்றியும் நகர மன்றத்தில் கடந்த ஓராண்டில் தி.மு.க. செய்தபணிகளைப் பற்றியும் பேசினார்.

பின் மன்றச் செயலாளர் ஆண்டறிக்கை படித்தார். தோழர்கள் மணிபர், உதய குமார், பவள வண்ணன் ஆகியோர் பேசினர்கள்.

வட்டத்து நகரமன்ற உறுப்பினர் தோழர் கோபால் அவர்கள் தான், இந்தப் பகுதிக்குச் செய்துள்ள பணிகளை விளக்கமாகக் கூறினர், ரோட்டு வசதி, மின்சாரம், சுகாதார விடுதி இவைகளுக்காகச் செய்துள்ள பணிகளை விளக்கினர். நகர மன்ற உறுப்பினர் குமாரசாமி மாநகராட்சி மன்ற துணைத்தலைவர் திரு தேவராசன் ஆகியவர்கள் நகர மன்றம் நகரத்தில் செய்வதற்காக வகுத்துள்ள திட்டங்கள் பற்றியும் வரவு செலவு திட்டத்தில் ஏழை மக்கள் நலனுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகைகளைப் பற்றியும் விளக்கினர்.

பின் அறிஞர் அண்ணா அவர்கள் பேசியதாவது,

அன்புள்ள தலைவர் அவர்களே பெரியோர்களே, தாய்மார்களே, நண்பர்களே.

இன்று, நகரத்தின் ஒரு பகுதியாக உள்ள இந்த சிறு கிராமமாகிய கோட்டூர், நகரத்தோடு இணைந்துள்ள ஊராக இருந்தாலும், கிராமமாகவே தோற்றமளிக்கிறது.

இந்த ஊரில் நமது கழகத்தின் பணிகளையும், கருத்துக்களையும் பரப்புவதற்காக நல்ல பணிகளை ஆற்றி வரும். நமதருமை நண்பர்களை மிகவும் பாராட்டுவதோடு, இந்தப் பகுதியிலுள்ள

(3ம்-பக்கம் பார்க்க)

மாலைமணி

ஆசிரியர்: பி.எஸ். இளங்கோ

மணி 2 — 29-5-60 — ஒலி 30

அபாயச் சங்கு !

பொறுப்பில் உள்ளவர்களின் பொறுப்பற்றத் தன்மையால் அமைதி அழிந்து உலகபெங்கும் அபாயச் சங்கின் அலறல் ஒலி, ஒலிக்கத் தொடங்கி விட்டது!

"விரைவில்—மிக விரைவில், இந்த உலகம் மூன்றுவது மகாயுத்தத்தை காண நேரிடுமோ" என்று எல்லோரும் பெரும் கவலைக்குள் ஆழ்ந்துக்கிடக்கின்றனர்!

பாரீஸ் மாநகரத்தில் நடைபெற இருந்த பெருந்தலைகள் மாநாடும்—அந்த மாநாடு நடை பெறாமல் போனச் சம்பவங்களும், அங்கே நடைபெற்றிருக்கிற இரு பெரும் வல்லரசுகளின் மோதல்களையும், அந்த மோதல்களை யொட்டி உலகமெங்கும் எதிரொலித்திருக்கின்ற—எதிரொலிக்கப் போகின்ற பயங்கர நிகழ்ச்சிகளையும் நினைத்துப் பார்க்கும்போது மனித இனத்தில் பிறந்துவிட்ட எல்லோருக்கும் பெரும் கவலை ஏற்படுவது இயற்கை தானே?

சோவியத்து நாட்டின் மீது அமெரிக்காவின் வேவு விமானம் பறந்ததை எவருமே சரியென்று ஒப்புக் கொள்ள முடியாது! உண்மையில் தாய் நாடடுப்பற்றுள்ளவன் இதை சரியென்று ஒப்புக் கொள்ளவே மாட்டான்!

அமெரிக்காவிடம் மிக சக்தி வாய்ந்த யுத்தக் கருவிகள் குவிந்துக் கிடப்பதாகச் சொல்லப்படுகிறது! நொடிப் பொழுதில் உலகத்தையே அழிக்கக் கூடிய கருவிகளை வைத்துக் கொண்டு—மற்ற நாடுகள் மீது வேவு பார்க்க வேண்டிய காரணமென்ன? தனது சுய வலிவில் நம்பிக்கையில்லாமல் போய் விட்டதா? தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ளும் சக்தி அமெரிக்காவுக்கு இருக்கும்போது இந்த வீண், அவசியமற்ற வேலையில் ஈடுபடுவானேன்? உலகத்தையே பெரும் அபாயத்திற்குள்ளாக்குவானேன்?

சோவியத்து நாட்டுப் பிரதமர் குருஷேவ் நடந்து கொண்டிருக்கிற முறையையும் நம்மால் கண்டிக்காமல் இருக்க முடியாது! சோவியத்து நாட்டின் மீது அமெரிக்காவின் விமானம் பறந்ததற்கும், பெருந்தலைகள் மாநாட்டிற்கும் என்ன உறவு இருக்கிறது! அது உங்களுடைய சொந்த விவகாரம்! இது உலக விவகாரம் இருவர் நடைய சுயநலத்திற்காக உலகத்தையே பலியிட நினைப்பதா?

குருஷேவ் பேச்சில் அனல் தெறித்தது—தெறிக்கத்தான் செய்யும்! அவருடைய உள்ளம் கொதித்தது—எவருக்கும் கொதிக்கத்தான் செய்யும்! என்றாலும் உலக நன்மையை உத்தேசித்து மாநாட்டைக் கூட்டி ஒரு முடிவைத் தேடிக் கொண்டிருக்கலாம்!

அமெரிக்க நாட்டுத் தலைவர் ஐசன்ஹோவர்—"வேவு விமானம் அனுப்புவதை நிறுத்த வைத்திருக்கிறோம" என்று கூறிய பின்பும், குருஷேவ் பிடிவாதம் பிடிக்க வேண்டிய காரணம் என்ன? மீண்டும் விமானம் பறந்தால் சுட்டு வீழ்த்திவிடலாமே!

எங்களுக்கு குருஷேவ் மீது பற்றோ, அமெரிக்கா மீது வெறுப்போ கிடையாது! அது எங்களுக்குத் தேவையற்றதுமாகும்!

இந்த இரு நாடுகளின் பல பரீட்சையால் உலகமே அழிய வேண்டுமோ? இந்த உலகம் வாழ்வதும், வீழ்வதும் இந்த இருவர்களுடைய கரங்களில் தான் இருக்க வேண்டுமா? ஆமாம், இந்த உலகத்தின் தலைவிதி அப்படித்தான் இருக்கும்—இதை மாற்றவோ, அழிக்கவோ யாருக்கும் துளியும் சக்தியில்லை!

இந்த நிலையில் பொறுப்பில் உள்ளவர்கள் பொறுப்போடு நடந்து கொள்ளாவிட்டால் பெரும் தீமையை நிச்சயமாக அனுபவிக்கத்தான் வேண்டும்!

"தென்னகத்தை நோக்கி பெரும் அபாயம் நெருங்கிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில்—நாம், போராட்டத்தில் ஈடுபட்டு இந்தியை எதிர்க்க வேண்டிய இந்த சமயத்தில்—நமக்கு உலக விவகாரம் எதற்கு?" என்று சிலர் கேட்கக் கூடும்!

நாம், மற்றவர்களைப் போல் பொறுப்பற்ற அரசியல்வாதிகள் அல்ல! உலக நிலைமையை உணர்ந்தவர்கள்! நம்மால் ஏதும் செய்ய முடியாவிட்டாலும் அதைப் பற்றி சிந்தித்தாவது பார்க்கும் தரத்தில் உள்ளவர்கள் மற்றவர்களைப் போல் "எனக்கென்ன" என்று திண்ணைப் பேச்சில் ஈடுபட்டு—"அவன் துரோகி, இவன் துரோகி" என்று கதை யளந்துக் கொண்டிருப்பவர்கள் அல்ல!

இந்த உலகம் இரண்டு மகாயுத்தத்தைக் கண்டிருக்கிறது! என்றாலும், நாம் இதுவரை யுத்த மென்றாலே பொருள் தெரியாமலேயே இருந்து வந்திருக்கிறோம்!

இன்று அந்த நிலை நமக்கு நிச்சயமாக இல்லை! நேருக்கு நேர் எதிரியை சந்தித்துப் போராட வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம்!

கிழக்கு ஜெர்மனியுடன் ரஷ்யா ஒப்பந்தம் செய்து கொண்டு விட்டால் அடுத்த கணமே இந்த உலகம், யுத்த அபாயத்தில் சிக்கத்தான் செய்யும்! அடுத்த கணம் என்பது, அடுத்த நிமிடமாகலாம், அடுத்த மணியாகலாம்—அல்லது அடுத்த நாளாகலாம்! கட்டாயம் யுத்தம் வரும் என்பதற்குள்ள ஆதாரங்களைவிட—"வராது" என்பதற்குள்ள ஆதாரங்கள் மிக மிகக் குறைவுதான்

கிழக்கு ஜெர்மனியோடு ஒப்பந்தம் செய்யப்பட்டு அபாயச் சங்கு ஒலிக்கத் தொடங்கினால் நமக்கு கிழக்கு திசையில்—எல்லையில் காத்துக் கொண்டிருக்கிற சீனர்கள் கைகளைக் கட்டிக் கொண்டா இருப்பார்கள்?

பாக்கிஸ்தான் அமெரிக்காவின் தளமானால்—நாமும் களமாவோம்!

முன்புபோல், வேட்டு சப்தங்களையே கேட்காதவர்களாக, விமானங்களையே பார்க்காதவர்களாக இருக்க முடியாது!

பெருந்தலைகள் மாநாடு முறிந்து, குருஷேவ் தன் கரத்தைத் தூக்கி புஜபலத்தைக் காட்டி சவால்விட்டதைப்பற்றி நாம் ஏதும் வருத்தப்பட்டதாகவோ, துயரப்பட்டதாகவோ தெரியவில்லை!

பொறுப்பில் உள்ளவர்கள் தயவு செய்து இன்றுள்ள உலக நிலையைப் பற்றி கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்! நம்மை நாமே பாதுகாத்துக் கொள்வதற்கான வழிவகைகளை உடனே செய்ய வேண்டும்!

நாம் பிரார்த்தனை செய்து செய்து பழக்கப்பட்டவர்கள். அகிம்சையைப் போதித்துப் போதித்து காலத்தைக் கடத்தி வந்தவர்கள். ராட்டையை சுற்றிச் சுற்றி மகிழ்ந்தவர்கள்! அவைகளெல்லாம் இந்த உலக நிலைக்கு ஏற்றதாகாது!

இதையெல்லாம் உணர்ந்து இன்றுள்ள அபாயத்திலிருந்து நாம் தப்பித்துக் கொள்ளும் வழியைத் தேடிக் கொள்ள வேண்டும்!

இப்படி எழுதுவதால் யுத்தமே வந்து விட்டதாகச் சொல்லவில்லை! வெள்ளம் வருவதற்கு முன்பு அணை போடுவது விவேகமல்லவா?

சென்னை நகர சபையில் நாம் ஆளுங்கட்சி ! மாநிலத்தில் நாம் எதிர்க்கட்சி !

உலகத்திலேயே எவருக்கும் கிடைக்காத வாய்ப்பு நமக்குக் கிடைத்திருக்கிறது !

(அண்ணா பேச்சு)

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பொதுமக்கள் அவர்களது சிரிய பணிகளுக்கு உறுதுணையாக இருந்து அவர்களுக்கு ஆதரவு நல்கி வருவது கண்டு மகிழ்வவோடு அவர்களையும் பாராட்டுகிறேன். அவர்கட்கு எனது நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கும் இந்த மன்றத்தினர் இன்று இங்குபேச வாய்ப்பளித்தமைக்கு அவர்கட்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளகிறேன்,

இந்த வட்டத்தின் மாநகராட்சி மன்றத்தின் உறுப்பினராக நமது கழகத்தின் சார்பாக எனது அருமை நண்பரும். நமது இயக்கத்தில் பல்லாண்டு உழைத்து வரும், ஏழைமக்களின் நலனுக்காக உழைத்துவருபவருமான கோபால் அவர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள்,

இது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுக்கிறது.

நண்பர் கோபால் சுயமரியாதை இயக்கத்திலிருந்து நமது கொள்கைகளைப் பரப்புவதற்காக அரும்பாடு பட்டு வருபவர். அவர் பிற்பட்ட வகுப்பினரின் நலனுக்காகப் பாடுபடுவதே அவரது முக்கியநோக்கம். அப்படிப்பட்ட ஒரு உண்மை ஊழியரைத் தேர்ந்தெடுத்த இந்தப் பகுதி மக்களை மனமாரப் பாராட்டுகிறேன்.

நண்பர் கோபால் போன்ற சாதாரண ஏழை ஊழியரைத் தேர்ந்தெடுத்ததால் தான்—மக்களின் குறைகளைத் தெரிந்தவரை தேர்ந்தெடுத்ததால்தான் இன்று இந்த மன்றத்தார் பத்து, பன்னிரண்டுஆண்டுகளாகக் களைய முடியாத குறைகளை நீக்க வேண்டும் என்று வேண்டுகோள் மூலம் கேட்டிருக்கிறார்கள். தீர்மானங்கள் மூலம் கேட்டிருக்கிறார்கள், நண்பர் கோபால் அவர்களும், தான் செய்துள்ள பணிகளையும் செய்ய திட்டமிட்டுள்ள பணிகளையும் மிகவும் நல்ல முறையில் விளக்கினார். மற்றும் உங்களிடம் ஓட்டு தவணையும் கேட்கிறார். ஓட்டத்தில் உங்கள் குறைகளைக் களைந்து ஆவன செய்வதாகவும் கூறியுள்ளார்.

இதற்கு முன் இப்படி உங்களால் கேட்க முடியுமா? செட்டிநாட்டு அரசர் தம்பி சிதம்பரத்திடமோ, கோபதிநாராயணசாமி செட்டியாரிடத்திலோ, குண்டூர் நரசிம்மராவிடமோ இவ்வளவு தாராளமாக உரிமையோடு கேட்க முடியுமா? கேட்டிருக்கிறீர்களா? அவர்களை அணுகத்தான் முடியுமா? கேட்கத்தான் முடியுமா? அப்படி அணுகினாலும் நீங்கள் கூறுவதைப் பொறுமையோடு கேட்டிருப்பீர்களா?

நண்பர் கோபால் உறுப்பினராக இருப்பதால் தான் அவரை தினம் நீங்கள் பார்க்க முடிகிறது. அவரும் உங்களை தினம் சந்திக்கிறார். சீமான்களும். முதலாளிகளும், செல்வந்தர்களும். மிட்டாக்களும், மிராசுதார்களையும் தேர்ந்தெடுத்திருந்தால் அவர்கள் உங்கள் குறைகளைப் பற்றி அறிந்து கொள்ள முடியுமா உங்களிடம் நமது நண்பர் கோபால் கூறியபடி தாம் செய்தள்ள—செய்யவிருக்கும் பணிகளைக் கூறியிருப்பீர்களா நண்பர் கோபாலை எங்கும். எந்த இடத்திலும் காணலாம். பெரிய மாளிகைகளில் வசிக்கும் சீமான்களையோ, செல்வர்களையோ காண வேண்டுமானால், பங்களாக்களிலும், மாளிகைகளிலுந்தான் பார்க்க முடியும். அப்படி அவர்களைச் சுலபமாகப் பார்க்க முடியுமா?

பங்களாக்களில் வாசற்படியில் காவல் புரியும் கூர்க்கா காவற்காரனையும், மக்களைக் கண்டதும் வேகமாக மேலே பாய்ந்து வரும் அல்சேஷர் நாயைத் தாண்டிச் சென்ற பின் தான் பார்க்க முடியும். அப்படியும் மீறி உள்ளே சென்றாலும் பார்க்க முடியாது. அவர் வேறு பாதையில் வெளியே சென்று விடுவார்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஏழைகளின்—பாட்டாளிகளின்பிற்பட்டவர்களின் இயக்கம் அந்த இயக்கத்திலுள்ளவர்களும் அப்படிப் பட்டவர்கள் அதனாலேயே உங்களிடம் அன்பாக இருந்து குறைகளைக் கேட்கிறார்கள்,

ஆனால் நமது நண்பர் கோபாலையோ, அல்லது நமது கழக 45 உறுப்பினர்களையோ ரோட்டில் நடந்து போய்க் கொண்டிருக்கும் போது நீங்கள் கைதட்டி "ஐயா வாருங்கள், எங்களுக்கு இன்னின்ன குறைகள் இருக்கிறது, அதை நீக்குங்கள்" என்று கேட்கலாம்.

இன்று மாநகராட்சி மன்றத்தில் ஏழை மக்களின் நலனில் அக்கறையுள்ள, அவர்களிடத்தில் அன்றாடம் பழகி வரும் சாதாரணமான நிலையிலுள்ள 45 பேர்கள் அங்கு இருக்கிறார்கள்.

அவர்கள் இந்த ஓராண்டில் சாதித்துள்ளதை இங்கு இந்தக் கூட்டத்தில் ஒரு மணி நேரத்தில் விளக்கிக் கூற முடியாது.

மாநில அமைச்சர்களும், இதற்கு முன் சென்னை மாநகராட்சி மன்றத்தை நிர்வகித்தவர்களும் எண்ணிப் பார்க்க முடியாததையும், அவர்கள் மனதில் தோன்றாததையும் நமது தோழர்கள் திட்டம் தீட்டி அரசினருக்குக்கொடுத்துள்ளார்கள். இதை மாநில சர்க்காரே கண்டு திகைப்படைந்து விட்டார்கள் சென்னை மாநகரத்தின் பொறுப்பை நாம் ஏற்றோம். நாம் பொறுப்பேற்ற பின் நாம் என்ன செய்யப் போகிறோம் என்று பலர் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். வரி பளுவால் அல்லற்பட்ட ஏழை மக்களும், மற்றும் குடிசையில் வாழ்வோரும், நடைபாதையில் வாழ்வோரும், நம்மை எதிர்பார்த்தார்கள். பல ஆண்டுகளாக நகரிலிருந்த தண்ணீர் குறைபாட்டை நீக்காது மக்கள் தாங்க முடியாத தொல்லைகளுக்காளாகி வந்தார்கள். அவர்களும் தங்களது தொல்லையை நமது தோழர்கள் நீக்குவார்களா என்று என்று எதிர்பார்த்தார்கள்,

நமது தோழர்கள் நிர்வாகப் பொறுப்பை ஏற்றதும் பல விஷயங்களில் தங்கள் கவனத்தைச் செலுத்தினார்கள். தங்களுக்குத் திறமை இருக்கிற தென்பதைக் காட்ட; தாங்கள் ஏழை மக்களின் அன்பர்கள் என்பதைத் தெரிவிக்க வரிவிதிப்பதிலிருந்து வந்த பேதத்தை நீக்கினர்; வரி கொடுக்காது ஏமாற்றி வந்த செல்வந்தர்களுக்கு வரி விதித்தனர். மற்றும் இந்த குறுகிய காலத்தில் என்னென்ன செய்ய முடியுமோ அதை யெல்லாம் செய்து மாற்றும். மாநில அரசினரும், மக்களும் கண்டு வியப்புறும் வண்ணம் பணிகள் செய்தனர்.

சென்னை நகரில் இருந்து வரும் தண்ணீர் குறைபாட்டை எப்படி நீக்குவது என்று நமது கழக மேயரும், நமது நகர மன்ற உறுப்பினர்களும் நகர மன்றத்தின் நிதிக்குழு தலைவர் முனுசாமியும் பலமான சிந்தனை செய்தனர். பல அதிகாரிகளுடனும் நிபுணர்களுடனும் ஆலோசித்தார்கள். விவாதித்தார்கள், திட்டம்தீட்டினார்கள் திட்டத்தை மாநில அரசினருக்கு அனுப்பினார்கள்:

நமது நிதிக்குழுத் தலைவர் முனுசாமி அவர்கள் தீட்டி அனுப்பிய திட்டத்தை மாநில அமைச்சர்கள் பார்த்ததும் திகைப்படைந்து விட்டனர். யாருக்கும் உதிக்காத யோசனையை இவர்கள் கூறுகிறார்களே என்று வியப்படைந்து விட்டார்கள்.

தண்ணீர் பற்றாக்குறையை நீக்க நமது தோழர்கள் கிருஷ்ணா ஆற்றிலிருந்தாவது அல்லது சென்னையிலிருந்து நூற்று இருபத்தாறு மைலிலுள்ள "சேத்தியா"விலிருந்து வாய்க்காலில் ஓடும் தண்ணீரை தேக்கி சென்னைக்குக் கொண்டு வந்து மக்களின் துயரைப் போக்கலாம் என்றும் நமது தோழர்கள் யோசனை கூறியிருந்தார்கள்.

நமது மாநில அரசினர் கோதாவரி ஜில்லாவிலிருந்து கொண்டு வருவது கஷ்டமென்று உணர்ந்து சேத்தியாவிலிருந்து தண்ணீர் கொண்டு வருவது சுலபமென்று எண்ணி அதை வெகு விரைவில் அதாவது ஓராண்டிற்குள் தண்ணீர் கொண்டுவர ஒப்புதல்கொடுத்து அதற்கான முயற்சிகள் செய்து வருகிறார்கள்.

இதிலிருந்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், நமது தோழர்களின் ஆற்றலை, மக்கள் பணியில் உள்ள ஆர்வத்தை, மாற்றாரும் கண்டு மகிழும் வகையில் செய்ததை நாம் பூரிப்படையாமல் என்ன செய்வது?

காங்கிரஸ்காரர்கள் முதலில் கேலியும், கிண்டலும் செய்தார்கள் என்ன இவர்கள் திட்டம் "பகீரதன் கங்கையைக்கொண்டு வருவது" போலிருக்கிறது என்றார்கள் ஆனால் கடைசியில் நமது தோழர்கள் கூறிய யோசனைதான் சரியென்று அமைச்சர்கள் ஒப்புக் கொண்டு விட்டார்கள்.

இன்று சென்னை மாநகராட்சி மன்றத்தில் நல்ல முறையிலும் ஆற்றலோடும், மக்கள் நன்மையை உணர்ந்து பொலிவோடும், திறமையோடும் பணியாற்றுவது கண்டு நான் பூரிப்படைகிறேன்.

இன்று நாம் சென்னை சட்டமன்றத்தில் எதிர்கட்சியாகவும்; மாநகராட்சி மன்றத்தில் ஆளுங்கட்சியாகவும் இருந்து வருகிறோம்!

சட்டமன்றத்தில் நாம் ஏதாவது திட்டம் கொடுத்தால் நம்மை கேலி செய்கிறார்கள் நாம் சொல்வதை ஏற்க மறுக்கிறார்கள். காரணம் நாம் அங்கு பதினைந்து பேர்கள் இருக்கிறோம். அவர்கள் நூற்றைம்பது பேர்கள் இருக்கிறார்கள்.

இன்று உலக நாடுகளிலெல்லாம் அரசினரே பல தொழில்களை ஏற்று நடத்தி வருகிறார்கள் அது போல் நமது அரசாங்கமும் ஏன் தொழில்களை ஏற்று நடத்தக் கூடாது. அதனால் சர்க்காருக்கு பெருத்த லாபம் கிடைக்குமே என்றும் யோசனை கூறினேன், அதற்கு அமைச்சர்கள் என்னைப் பார்த்து. "எங்களைக் கூறிக் கொண்டிருப்பதைவிட திட்டங்கள் கொடுங்கள்" என்று கேட்டார்கள்,

நான் உடனே நிதி அமைச்சரிடம் கூறினேன். "பல நாடுகளில் அரசினர் ஆட்டு தொட்டிகளை அமைத்து ஆடுகளை வளர்த்து அதன் இறச்சியை எடுத்து அதைப் பக்குவப்படுத்தி பல நாடுகளுக்கனுப்பி அதனால் வரும் இலாபத்தை அடையலாமே" என்று யோசனைச் சொன்னேன்.

உடனே நிதியமைச்சர் சுப்பிரமணியம் பார்த்தீர்களா. இந்த அண்ணாதுரையை! என்ன ஆணவம் எங்களை கசாப்புக்கடை வைக்கச் சொல்லுகிறார். இவர் அறிஞராம் திட்டம் கேட்டால் கொடுக்க முடியவில்லை. அதற்குப் பதிலாக ஏதேதோ சொல்லுகிறார்" என்று கையாண்டி செய்து என்னைத் தாக்கினார். இதற்குக் காரணம் சட்டமன்றத்தில் நாம் பதினைந்து பேர்கள்,

மாநகராட்சி மன்றத்தில் நமது தோழர் முனுசாமி தண்ணீர் கொண்டுவர ஒரு திட்டம் கொடுத்தார், அதை ஏற்றுக் கொண்டார்கள். ஏன் ஏற்றார்கள். அங்கு

(4-ம் பக்கம் பார்க்க)

ஆட்சியாளர் குறைகளை கூறுவதே எதிர்க் கட்சியின் வேலை!

(அண்ணு பேச்சு)
(3ம் பக்கத் தொடர்ச்சி)

நாம் நாற்பத்தைந்து பேர்கள் இருக்கிறோம். அவர்கள் குறைவாக இருக்கிருர்கள். அதனுல் ஏற்றுக் கொண்டார்கள், அதைச் செயலில் நடத்த நிபுணர்கள் முயற்சி செய்து வருகிருர்கள்,

இன்று உலக நாடுகளில் நடைபெறும் விதத்லதை நமது துரைத்தனத்தார் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பல நாடுகளில் இயற்கை வசதிகள் இல்லாவிட்டால் விஞ்ஞானத்தின் உதவியைக் கொண்டு மின்சார வசதியைக் கொண்டு வசதிகளை உண்டாக்கி வருகிருர்கள் அதை நமது அரசினர் செய்யவேண்டும்

உதாரணத்திற்காக உங்களிடம் ஒன்றைக் கூற ஆசைப்படுகிறேன்.

ஒரு மாந்தோப்பு இருக்கிறது. அங்கு ஒரு மரத்தில் நிறைய மாப்பழம் இருக்கிறது. அதை பறித்து தின்ன வேண்டுமென்று ஒருவனுக்கு ஆசை பிறக்கிறது.

ஆனுல் பறித்து தின்னும்படியான நிலையிலில்லை, இவனுக்கு எட்டாத உயரத்தில் இருக்கிறது. அவன் என்ன செய்வான். அதைப் பறிப்பதற்கு முயற்சிப்பான். அது முடியாவிட்டால், அவனுடனிருக்கும் பையனைப் பிடித்து குனியச் செய்து அவன் முதுகில் ஏறி பழம் பறிப்பான். அது முடியாவிட்டால் அங்கும் இங்கு பார்ப்பான், யாராவது வருகிருர்களா என்று பார்த்து விட்டு கல்லை எடுத்து வீசி எறிந்து அதனுல் கீழே விழும் பழத்தை எடுத்து தின்ன முயற்சிப்பான். இதுதான் இயற்கை ஏனெனில் அவனுக்கு பழம் தேவை அது போல் தான் மக்களின் வசதிக்காக எவை, எவை தேவையோ அதை எந்தெந்த வகையில் செய்ய முடியுமோ அதன் படி செய்ய வேண்டும்,

இதை வைத்துத் தான் நான் சட்டமன்றத்தில் கூறினேன், சென்னை நகரில் ஏற்பட்டுள்ள தண்ணீர் தட்டுப்பாட்டைப் போக்க விஞ்ஞான முறையைப் பயன்படுத்தி மக்களுக்கிருந்து வரும் தண்ணீர் கஷ்டத்தைப் போக்க வேண்டுமென்று கூறியதோடு அவர்களுக்கு யோசனையும் கூறினேன்.

அதாவது சென்னை கடலிலுள்ள நீரை விஞ்ஞான முறையால் பக்குவப்படுத்தி குடிக்கும் நீர் கொண்டுவரவேண்டுமென்று கூறினேன் அதற்கு அமைச்சர்களும். காங்கிரஸ் அங்கத்தினர்களும் கேலி செய்தார்கள்.

''என்ன இந்த அண்ணுதுரை கடல் தண்ணீர் கொடுப்பதாமே உப்பு நீரையா கொடுப்பது இது கூடத் தெரியாத இவர் அறிஞராமே'' என்று நையாண்டி செய்தார்கள்.

நான் சொன்னேன் ''கடல் நீர் உப்பாக இருக்கும் என்பது எவருக்கும் தெரியும், இதை எங்கும் போய் கற்றுக் கொள்ள வேண்டியதில்லை. அந்த உப்பைத் நீக்க விஞ்ஞானத்தில் வழியிருக்கிறது. அதை பயன் படுத்த வேண்டும் என்று தான் கூறுகிறேன்'' என்று சொன்னேன், அதற்கு இது பைத்தியக்கார திட்டம் என்று சொன்னுர்கள்.

அவர்கள் கூறியதைப் பொய்ப்பிக்கும் படியும். நான் கூறியதை ஆதரிக்கும் முறையிலும் சில தினங்களுக்கு முன் செய்தித் தாள்களில் ஒரு செய்தி வந்திருக்கிறது. அந்தச் செய்தியை நமது அமைச்சர்களுக்கு அர்பணிக்கிறேன்.

''கடல் நீரில் உள்ள உப்பு சக்தியை நீக்கி விட்டு குடி தண்ணீராக மாற்றி மக்களுக்கு உபயோகிக்கும்படியான திட்டத்தை அமுலாக்க துறைமுக அதிகாரிகள் யோசித்து வருகிருர்கள். இதற்கான இயந்திரங்களை அமைக்க யோசித்து வருகிருர்கள்'' என்பது இந்தச் செய்தி.

இதை நமது அரசினர் கவனிக்க வேண்டும் இதற்கான இயந்திரங்கள் அமைக்க—அதாவது துறைமுகத் தொழிலாளர்களுக்கு மட்டும் உபயோசம் ஆகும்படி செய்வதானுல் சில லட்ச ரூபாய்களே செலவாகுமென்றும். சென்னை மாநகர மக்கள் உபயோகத்திற்குப் பயன்படுத்துவதனுல் பல லட்ச ரூபாய்கள் செலவாகுமென்றும் சொல்லப்படுகிறது, இப்படிச் செய்வதால் ஏற்படும் சழிவு நீரிலிருந்து மின்சாரத்தையும் உற்பத்தி செய்து பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் கூறப்படுகிறது,

இதை நமது மாநில துரைத்தனத்தார் செய்வார்களா? இவர்களுக்கு அந்த அதிகாரமில்லை. இதை செய்ய வேண்டுமானுல் டில்லி அரசினரின் அனுமதிபெற வேண்டும். டில்லி அரசினர் இவர்கள் திட்டத்தை ஏற்று செய்வதில்லை. அவர்களை எதிர்த்து செய்யும் வீரம் நமது அமைச்சர்களுக்கு இல்லை.

இவர்கள் வீரத்தனம், சூரத்தனம் நான் இந்த இரண்டாண்டுகளாக எதிரிலிருந்து கொண்டு பார்த்துத்தானே வருகிறேன்.

சென்னை மாநகராட்சி மன்றம் ஏதாவது செய்ய வேண்டுமானுல் மாநில அமைச்சர்களைக் கேட்க வேண்டும் மாநில அமைச்சர்கள் டில்லியிடம் கேட்க வேண்டும். இந்த முறையை நாம் எடுத்து கூறினுல் நம்மை தூற்றுவதுடன் நமக்கென்ன தெரியுமென்று கேட்கிருர்கள்,

இதற்கு உதாரணமாக எனக்கு ஒரு கதை நினைவிற்கு வருகிறது.

ஒரு வீட்டில் ஒரு வயதானவர் இருக்கிருர்! அவருக்குப் பொடி தேவைப்படுகிறது. அவர் கடைக்குச் சென்று வாங்கிவரும் நிலையிலில்லை. கையில் காசுமில்லை அவர் என்ன செய்கிருர். தெருவிலே பிள்ளைகளுடன் மகிழ்ச்சியோடு விளையாடும் தனது பேரனைக் கூப்பிடுகிருர் ''அப்பாவிடம் ஒரு அணு வாங்கி எனக்கு பொடி வாங்கி வாடா கண்ணு'' என்கிருர். அவன் தனது தந்தையிடம் நேரடியாகச் சென்று காசு கேட்கும் தைரியம் அவனுக்கில்லை. அவன் உடனே தாயிடம் செல்கிருன். ''தாத்தாவிற்கு பொடி வாங்க ஒரு அணு வேண்டுமென்று'' அம்மா தனது கணவனிடம் நளினமாகப் பேசி ஒரு அணு கேட்கிருள். அவர் அரையணு கொடுக்கிருர்.

இன்று இந்த நிலைதான் நமக்கிருந்து வருகிறது. நமது காமராசரிடம் நமது மக்களின் நன்மைக்கான காரியம் செய்ய வேண்டுமானுல், சுப்பிரமணியத்திடம் கூறுகிருர். ஏனெனில் அவர் தான் டில்லியில் சென்று பேசும் திறமை சிறிதாவது பெற்றிருக்கிருர். அவர் டில்லி அரசிடத்திலாவது போய் கெஞ்சி, நளினமாகப் பேசி அரையணுவாவது பெற்று வருகிருர்.

இந்த நிலை மாற வேண்டுமென்று தான் நாம் கூறுகிறோம், நம்முடைய நாட்டிற்கு, நம் மக்களுக்கு செய்ய வேண்டிய காரியத்தை நாமே செய்வதற்கான அதிகாரம் நமக்கிருக்க வேண்டுமென நாம் கேட்கிறோம். இது கூட புரியாது நம்மை கேலி செய்கிருர்கள்.

நம்முடைய நாடு நமக்கிருந்தால், நம்முடைய நாட்டை ஆளும் உரிமை நமக்கிருந்தால் நாம் ஏன் இன்னொருவர் உதவியை, தயவை நாட வேண்டும்,

அதற்காகத் தான் நமது கழகம் திராவிட நாடு திராவிடர்க்காக வேண்டும். திராவிடர்கள் ஆள வேண்டுமென்று கூறி வருகிறது. இதை நமது மாநில அமைச்சர்கள் புரியாது கோபப்படுகிருர்கள்.

நாம் இன்று பதவியிலுள்ள மந்திரிகள் மீது பொருமை கொண்டோ; அவர்கள் வகிக்கும் பதவி மீது ஆசை கொண்டோ நாம் இப்படி கேட்கவில்லை. அப்படி எனக்கு ஆசை இருந்தால் நமது முதலமைச்சர் காமராசரைப் பார்த்து புன் சிரிப்பை வரவழைத்து என்ன சௌக்கியமா என்று கேட்டால் போதுமே அப்படி ஒரு முறைக்கு இரு முறை கேட்டால் அவருக்கே என் மீது அன்பு பிறக்கும் என்னை புன்முறுவலோடு பார்ப்பார்.

பின் ஒரு நாள் திடீரென்று அவரிடம்போய் நின்ருல், என்ன எதிர்பாராத விதமாக வந்துவிட்டாய் என்று கேட்பார், ஒன்றுமில்லை 'நேற்று இரவு 12 மணிக்கு நான் நன்ருகத் தூங்கிக் கொண்டிருந்தேன். ஒரு கோரரூபம் கையில் வேலாயுதத்தை வைத்துக் கொண்டு, காளி போல் வந்து என்முதுகில் அடித்து எழுப்பியது, யார் என்றுக் கேட்டேன், நான் பாரதமாதா, இதுவரை நீ எனக்குத்துரோகம் செய்து வந்தாய் இனிமேலாவது நல்லவனுக நடந்து கொள் என்றது. நான் என்ன செய்ய வேண்டுமென்று கேட்டேன். உடனே காமராசரைப் போய்பார் என்று கூறிற்று. என்று அவரிடம் அப்படியே பேசிக்கொண்டிருந்தால் எனக்கு மந்திரி வேலை கிடைக்காதா?

என்னுல் மந்திரி பதவியை நிர்வகிக்க முடியாதா?

கமாராசர் ஒரு இலாகாவை நிர்வகிக்கும்போது, கக்கன் 'பைல்''களைப் பார்க்கும் போது என்னுல் முடியாமலா போய் விடும்.

என்னைத் தூற்றித் திரியும், தாக்கிப் பேசிவரும், ஏசல் பேச்சு பேசி வரும் காங்கிரஸ்காரனிடமோ, காங்கிரஸ் தலைவர்களிடமோ போய் ''அண்ணுதுரை மந்திரி பதவிக்கு லாயக்கா'' என்று கேளுங்கள். அவன் தூங்கிக் கொண்டிருந்தாலும் மந்திரி பதவிக்கு லாயக்கா என்று கேட்டுப் பாருங்கள். தூக்கக் கலக்கத்திலும் அண்ணுதுரை இப்போது இருப்பவர்களை விட மிக லாயக்கானவன்'' என்று கூறுவார்கள் கூறிவிட்டு என்ன சொல்வார்கள் என்ருல் ''அவன் நம்மிடம் இல்லை வேறு முகாமில் அல்லவா இருக்கிருன்'' என்று கூறுவார்கள் நான் லாயக்கில்லாதவன் என்று எவர் வாயிலும் வராது.

நாம் இன்று பணியாற்றுவது நமது கழகம் சொல்லி வருவது பதவிக்காகவல்ல, பட்டத்திற்காகவல்ல நமது நாட்டின் விடுதலைக்காக, நாட்டு மக்களின் தன்மானத்தைக் காப்பாற்றவே செய்து வருகிறோம்.

அதைப் போன்றே மாநகராட்சி மன்றத்திலும் நமது தோழர்கள் மக்களின் நன்மைக்காகவே அங்கு பணியாற்றுகிருர்கள்.

சட்ட மன்றத்திற்கும், பாராளுமன்றத்திற்கும் நாம் சென்று அங்கு வடநாட்டு ஏகாதிபத்தின் கொடுமைகளைப் பற்றியும் நம்நாடு ஏகாதிபத்தியத்தால் அடைந்துள்ள பிற்போக்குத் தன்மையைப் பற்றியும் நம் நாட்டு மக்கள் இன்று அடைந்துள்ள இன்னல்களைப் பற்றியும் அதைக் களைவதற்காக நாடு பிரிய வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும், அங்கு பேசுகிறோம்!

நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் மாநகராட்சி மன்றத்திற்கு 45 தோழர்களை அனுப்பியது அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் மக்கள் நன்மைக்கான பல திட்டங்களை தீட்ட முயன்றனர்.

அந்தத் திட்டங்களைப் பார்த்து பணம் இல்லை யென்று கூறினர்கள். நமது தோழர்கள், நகாலுள்ள பெரிய பெரிய மாடமாளிகைகளைப் பார்த்தனர் அலங்காரமாக இருந்த பெரிய, பெரிய பங்களாக்களைப் பார்த்தனர். அதற்கென்ன வரிகள் போடப்பட்டிருக்கிறதென்பதை பரிசிலித்துப் பார்த்தனர். இதற்கு முன் மாநகராட்சி மன்றத்தில் நிர்வாகத்திலிருந்தவர்கள் அந்தச் செல்வந்தவர்களுக்குப் பாதுகாப்பளித்து வந்தார்கள்.

(9-ம் பக்கம் பார்க்க)

"நாட்டு விடுதலை தான் எங்கள் மூச்சு" அதை எங்கும்-எப்பொழுதும் கூறியே வருவோம்!

100 வட்டத்திலும். 100 கூட்டங்கள் நடைபெறும் நாள் கண்டிப்பாக வரத்தான் போகிறது!

சென்னையில் கலைஞர் கருணாநிதி போர் முழக்கம்!

சென்னை 4வது வட்டம். வண்ணையம்பதி சஞ்சீவிராயன் கோவில் தெரு, கே. எஸ். பாண்டியன் படிப்பகம் மூன்ருவது ஆண்டு விழாவில், கலைஞர் மு கருணாநிதி பேசியதாவது :—

அன்புள்ள தலைவர் அவர்களே! பெரியோர்களே! தாய்மார்களே!!

எனக்கு, பாண்டியன் படிப்பகத்தின் மூன்ருவது ஆண்டு விழாவில் கலந்து கொள்ளும் வாய்ப்பினைக் கிடைத்தமைக்கு மகிழ்ச்சியடைகிறேன். பாண்டியன் படிப்பகம், திராவிடமுன்னேற்றக் கழகத்தின் ஓர் அங்கம், திராவிடமுன்னேற்றக்கழகக் கொள்கைகளைப் பரப்பி வருகிறது.

அதற்காகக் நான் இம்மன்றத்தினரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இம்மன்றம் துவக்கப்பட்டு இரண்டாண்டு காலமாகிறது. இம்மன்றம் இரண்டாண்டு காலமாக நம் கழகப் பணிப் புரிந்து வருகிறது.

இம்மன்றத் துவக்க விழாவிலும் நான் தான் கலந்து கொண்டேன். பொதுவாக மன்றங்கள் துவக்க விழா அன்றே மூடுவிழாவும் நடைபெறும். ஆனால் இம்மன்ற நண்பர்கள் மன்றத்தைத் தொடர்ந்து நடத்தி மூன்ருவது ஆண்டு விழாவில் கலந்து கொள்ளும் வாய்ப்பினை அளித்தமைக்கு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இன்று இங்கே என் கூட்டம் நடைபெறுகிறது. பக்கத்தில் நமது நண்பர் சம்பத் கூட்டம் நடைபெறுகிறது. இரண்டு கூட்டங்களும் பாண்டியன் படிப்பக சார்பில் தான் நடைபெறுகிறது!

இரண்டு கூட்டங்கள் நடைபெறுவதைக் கண்டு மாற்ருர் அரசியல் வண்ணம் பூசுவார்கள்! பலவாறு கயிறு திரித்து கதை கட்டி மயக்குவார்கள். ஆனால் நான் பக்கத்துத் தெருவில் சென்ற மாதம் பேசினேன், இன்று இங்கே பேசுகிறேன். அதற்காக மக்கள் கூடாமலா இருக்கிருர்கள்.

நான் இந்த இரண்டு கூட்டம் நடைபெறுவதற்கு அரசியல் வண்ணம் பூசவேண்டுமென்று சொல்லுகிறேன். இரண்டும் திராவிட முன்னேற்றக் கழக கூட்டங்கள் பக்கத்து பக்கத்து வட்டத்தில் ஒரேநாளில் இரண்டு கூட்டங்கள் நடை பெறுகிறது.



நண்பர் சம்பத் ஒரு கூட்டத்திலும், நான் ஒரு கூட்டத்திலும் பேசுவதைக் கண்டு காங்கிரசார்-மாற்ருர். மூச்சுத் திணறுகிருர்கள்.

இன்று இரண்டு கூட்டங்கள் நடைபெறுகிறதே; இதன் இரகசியம் என்ன? என்று மாற்ருர் சிந்தனை செய்து மூளையைக் குழப்பிக் கொள்கிருர்கள்

நாங்கள் இன்று இந்த இரண்டு கூட்டங்களை நடத்தி எங்கள் பலத்தைப்பரிட்சை செய்கிருேம்.

சென்னையில் 100 வட்டங்கள் இருக்கிறது. 100 வட்டத்திலும் ஒரே நாளில் 100 கூட்டங்கள் நடைபெறுகிறது. ஒரு கூட்டத்தில் அண்ணு பேசுகிருர், மற்ருெரு கூட்டத்தில் நாவலர் பேசுகிருர். ஒரு கூட்டத்தில் ஆசைத்தம்பி பேசுகிருர், மற்ருெரு கூட்டத்தில் சம்பத் பேசுகிருர் இதே போன்று எல்லோரும் ஒவ்வொரு கூட்டத்தில் பேசுவார்கள். எங்கள் இயக்கத்தின் பலத்தை பரிட்சை செய்வதற்காகவும் இன்றைய நிலையில் திராவிடமுன்னேற்றக் கழகம் மக்களிடத்தில் எத்தகைய செல்வாக்கைப் பெற்றிருக்கிறது. மக்கள் 100 கூட்டங்களுக்கும் வந்து ஆதரவு தருகிருர்களா என்பதைப் பார்த்து எங்கள் பலத்தை பரிசோதனை செய்து பார்க்கிருேம்.

நான் முன்பு பக்கத்துத் தெருவிலுள்ள சிந்தனைச்சிற்பி சி. பி. சிற்றரசு படிப்பகத்திற்கு பேச வந்திருந்தேன். அன்று தான் கருணாநிதி பேச்சைக் கேட்டோமே இன்று ஏன் கருணாநிதி கூட்டத்திற்குச்செல்ல வேண்டும் என்று மக்கள் இருந்து விட்டார்களா? இல்லையே, இன்றும் மக்கள் ஏராளமாகத் தானே வந்திருக்கிருர்கள். கருணாநிதி முன்பு 5 அடி உயரமிருந்தான். இன்று ஐந்தேகால் அடி உயரமாக இருக்கிறேனா? அன்று நேர்வாகு எடுத்திருந்தேன். இன்று கோணல்வாகு எடுத்திருக்கிறேனா? நான் வேறு புதிய இடங்களுக்குச் சென்று புதிதாகப் படித்துப் புதிய கருத்துக்களையா சொல்லப் போகிறேனா? ஒன்றுமில்லையே நாம் எப்போது. எங்கெங்கு எப்படி எப்படிச் சுற்றிச் சுற்றிப் பேசினாலும் "திராவிட நாடு; திராவிடருக்கே" என்று தான் முடிக்கிருேம்,

திராவிட முன்னேற்றக் கழக கொள்கைகளை அன்புரோஸ் ஆர்வத்துடன் பேசினர். அருப்புக்கோட்டைப் புலவர் எம். எஸ். ராமசாமி ஆசித்தனுக்கு அறை கூவல் விட்டுப் பேசினலும் திராவிட முன்னேற்றக் கழக கொள்கைகளை வைத்து. நன்ருக அழகுடன் உங்களிடையே பேசி கடைசி அளவில் "திராவிட நாடு திராவிடர்க்கே" என்று முடித்தார்.

இந்த திராவிட முன்னேற்றக் கழகத்தார்கள் எங்கு சென்ருலும்" திராவிட நாடு திராவிடர்க்கே" என்று தான் சொல்லுவார்கள். சட்ட சபையில் பேசினலும் திராவிட நாடு; திராவிடர்க்கே என்றும் பொதுக் கூட்டத்தில் பேசினலும் விழாக்களில் பேசினலும் திராவிடநாடு திராவிடர்க்கே என்றும் படத்திற்கு கதை எழுதினலும் திராவிடநாடு திராவிடருக்கே நடித்தாலும் திராவிடநாடு திராவிடருக்கே என்று தான் பேசுகிருர்கள் என்கிருர்கள் மாற்ருர்கள். இதற்கு நமது அண்ணு அவர்கள் அழகான பதிலைச் சொல்லி திராவிடநாடு திராவிடர்க்கே என்ப

(மேல் பக்கம் பார்க்க)



5

இன்பம் இன்பம்!

அந்திக் கதிரவன் இந்த பொல்லாத உலகத்தை விட்டு களிப்புச் சிரிப் பொலியோடு மேற்குப் பள்ளத்தாக்கில் போய் விழ்ந்து கொண்டிருந்தான்!

"நீ, இல்லா விட்டால் உலகம் இருண்டா விடும்" என கேலிச் சிரிப்பொலியை உதிர்த்துத் கொண்டே மின் விளக்குகள் நகரை ஒளி மயமாக்கிக் கொண்டிருந்தன!

என்றைக்குமே அமைதியைக் காணுது அலை பாய்ந்து கொண்டிருக்கும் கடல் மனக்குமுறலோடு பொங்கி எழுந்து கொண்டிருந்தது! இதைக் கண்டு சிறியவர்களும், பெரியவர்களும், ஆண்களும், பெண்களும மகிழ்ந்து, மகிழ்ந்து துள்ளி விளையாடிக் கொண்டிருந்தார்கள்! "மற்றவர்கள் படும் துன்பத்தில் இன்பம் காணுவது தான் மனித இனத்தின் இயல்பு போலும்" என மீனவன் வலையில் அகப்பட்ட மீன்கள் மனதுக்குள் பொருமிக் கொண்டிருந்தன!

எதைப் பற்றியுமே கவலைப்படாமல் சாந்தா தன் மனத் திரையில் ராஜன் உருவத்தை ஓவியமாக வரைந்துக் கொண்டிருந்தாள்! அவனே அழகு தெய்வத்தைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டே இருந்தான்!

"என்னுங்க! தவமா செய்துக் கொண்டிருக்கிறீர்கள்" ராஜனுடைய மௌனத்தை சாந்தா கலைக்க ஆரம்பித்தாள்!

"ஆமாம்!" ராஜன் தலையை அசைத்து சைகைக் காட்டினன்!

"எதற்காக இந்த தவமோ?' ராஜனை, சாந்தா வம்புக்கிழுத்தாள்!

"உஸ்!" மீண்டும், ராஜன் மௌனமாக சைகைக் காட்டினன்!

பக்கத்திலே மேனகா இருக்கிருள்! இந்த ரிஷியின் தவம் கலைந்து விடும்" சாந்தாவுக்கு இதைச் சொல்லஎத்தனை மகிழ்ச்சி எத்தனை இன்பம்!

எதற்கும் ராஜன் அசையவில்லை!

"நீங்கள் என்ன ஊமையா?" சாந்தா கேலி பேசினுள்!

"ஆமாம்! உன்னைப் பார்த்தது முதல் நான் ஊமையாகி தான் விட்டேன்!" ராஜனுடைய சொல்லில் தான் எத்தனை உணர்வு இருந்தது!

"அப்படின்னு, இப்ப பேசுவது?" சாந்தா ஏளனப் புன்னகையோடு கேட்டாள்!

"நானு பேசுகிறேன்? நீயல்லவா பேசுகிருய்?"

'நீங்கள் ஊமையா? பைத்தியமா?"

'இதை டாக்டர் அம்மா தான் கண்டு பிடிக்க வேண்டும்" ராஜன் பொருளோடு கேலி செய்தான்!

"அப்படியா! அப்படின்னு உங்கள் கையைக் கொடுங்கள் நாடி பார்த்துச் சொல்லுகிறேன்" என்று ராஜனுடைய கரங்களை பற்றினுள்!

மின்சாரம் தாக்கியது போல் அவனுடைய நாடி நரம்பை யெல்லாம் தாக்கி, உணர்ச்சி சூடேற்றி அவனை திக்குமுக்காடவைத்தது! இந்த உலகம் வைத்தியக்கார உலகம் அல்ல, பெண்களிடம் ஆண்கள் அடிமைப்பட்டுக் கிடப்பதும் தவறல்ல என்பதை இப்போது தான் அவன் புரிந்து கொண்டான்!

"கண்ணே! கனிரசமே! சற்று கண்டே!" ராஜன் பிதற்றிக் கொண்டே போனுன்!

"பைத்தியம் முற்றி விட்டதா?"

"ஆமாம் டாக்டர்!" ராஜன் இன்ப போதையில் மயங்கிக் கிடந்தான்!

'இப்படி படுங்கள் சரியான மருந்து தருகிறேன்" சாந்தாவின் மடியில் ராஜன் மது உண்டவனைப் போல் மயங்கிக் கிடந்தான்!

மை தீட்டிய கண்கள் காமன் கணைதொடுத்த அவனை அழைத்தன! இருவரும் ஒருவரானுர்கள்!

"அத்தான்..!" அவனுடைய மார்பில் சாய்ந்தபடியே கூப்பிட்டாள்!

'என்ன சாந்தா!" ராஜனும் நிதானத்தில் இல்லை!"

"இந்த இன்பம்...?"

"எப்படி இருக்கிறது என் கிருயா கண்ணே! தேனைவிட இனிக்கிறது தித்திக்கும் அமுதத்தைவிட ருசிக்கிறது!" என்று கூறிக் கொண்டே கனி இதழை புசித்தான்! சற்று கன்னத்தை மென்று ருசித்தான்!

"விடுங்கள்! யாராவது பார்த்து விடப் போகிருர்கள்!"

"நீ என்னை விட்டால் தானே, நான் உன்னை விட" மீண்டும் அவனுடைய அரவணைப்பில் சிக்கினுள்!"

"என்ன இது..?" சலித்துக் கொண்டவள் போல் மகிழ்ச்சியடைந்தாள்!

'இதுவா..? உனக்கே தெரியாதா?" எதையோ தொட்டு இன்பம் மூட்டினுன்!

"மூடுங்கள் அத்தான்! எதை எதையோ திறந்து கொண்டு, எங்கெங்கேயோ கையை வைத்துக் கொண்டு..." பெண் என்ற தன்மையில் கொஞ்சம் கூச்சப்பட்டாள்,

"நீ தானே, இதை என்ன என்று கேட்டாய்!" மீண்டும் அவன் சேஷ்டை செய்ய ஆரம்பித்தான்!

"அத்தான் கிழிந்து விடப் போகிறது!"

"இதுக்கா பயப்படுகிருய்? உனக்கு எத்தனை ஜாக்கெட்டுகள் வேண்டும்? வெல்வெட் துணியில் வேண்டுமா?" ஆர்கண்டியில் வேண்டுமா?" ராஜன் வாயால் அளக்க ஆரம்பித்தான்!

"ஓகோ! நீங்கள் அவ்வளவு பெரிய பணக்கார வீட்டுப் பையனு?" சாந்தாவின் பேச்சில் ஏதோ தொக்கி நின்றது!

"அல்லது என்னை ஏழை என்று நினைத்தாயா?"

"இல்லை! பணக்காரர்களை எனக்கு அறவே பிடிக்காது என்று தான் சொன்னேன்" சாந்தா கொஞ்சம் கர்வத்தோடே கூறினுள்!

"அப்படின்னு என்னை விரும்ப மாட்டாய் என்று சொல்லு!" ராஜனும் எதையோ மறைத்துப் பேசினுன்!

"ஆமாம்! ஆமாம்!" என்று கூறிக்கொண்டே எழுந்தாள்!

"என்ன சாந்தா, என் மீது கோபமா?" ராஜன் கெஞ்சினுன்!

"ஆமாம்! ஆமாம்! சாந்தா எழுந்து நடக்கவே ஆரம்பித்து விட்டாள்!"

'சாந்தா! நீ இல்லை என்ருல்..?"

'நீங்கள் இல்லையாச்சும்" சாந்தா கேலியோடு வேகமாக நடந்தாள்!

"சாந்தா! சாந்தா!" என்று கெஞ்சிக் கொண்டே அவள் பின்னே சென்ருன்! பின்னலைப் பிடித்து இழுத்தான்! அவள் வேண்டுமென்றே கீழே விழுந்தாள்! அவனே அவள் மேலேயே விழுந்து விட்டான்! ஊடல் கூடலில் முடிந்தது!

"என்னை?"

"உங்கள் உயிர் மறக்காது" கவலைப்படாதீர்கள்!

மீண்டும் அவள் கரங்களைப் பிடித்துக் கொண்டு—"இனிக்குது, இனிக்குது" என்று புசித்தான்!

"என்ன இத?" துடைத்துக் கொண்டே கேட்டாள்!

"பற்கள்!"

"பற்கள் வாய்க்குள் தான் இருக்க வேண்டும்.. இங்கெல்லாம் வரக் கூடாது தெரியுமா?"

"வந்தால்...! என்ன செய்வாய்?"

"நானும் அதை செய்வேன்!"

"எங்கே செய் பார்க்கலாம்?"

"உங்களுக்கு அடித்த அதிர்ஷ்டம் இந்த உலகத்தில் வேறு யாருக்குமே அடிக்காது அத்தான்!"

"ஆமாம் கண்ணே! உண்மையிலேயே நான் அதிர்ஷ்டசாலி தான்!

மெரினு கடற்கரையில் மனித சஞ்சாரமே இல்லை! கல்லூரியில் இருந்த கடிகாரம், பன்னிரெண்டு முறை ஒலித்து, நேரத்தைக் காட்டிற்று! கண் சிவக்கக் குடித்து விட்டுக் கிடந்த இந்தக் காதலர்களுடைய காதல் போதையும் தணிந்தது!

பொழுது விடிந்து பத்து மணியாகியும் சாந்தா படுக்கையை விட்டு எழுந்திருக்கவே இல்லை! அவளுடைய உடம்பு ஏதோ அலுப்புத் தட்டிப் போயிருந்ததை அவள் உணர்ந்தாள் "சேச்சே! இனி இரவில் கண்விழிக்கவே கூடாது" என்று தன் மனதுக்குள்ளேயே முணு முணுத்துக் கொண்டாள்! அவள் கூடமாவா கண் விழித்தாள்! கண் விழிக்கா விட்டால் அந்த இன்ப சுகத்தை அவள் எப்படிக் காண முடியும்!

அவளுடைய களைப்பு தீர்ந்தபாடில்லை போலும்! மீண்டும் முகம் முழுவதையும் மூடிக் கொண்டு படுக்கையில் படுத்து புரண்டு கொண்டிருந்தாள்!

"ஏண்டி சீ தேவி! இன்னும் எழுந்திருக்க மனம் வரவில்லையா?"

'சீ தேவியா?"

"ஆமாம், ஆமாம்! பகல் முழுதும் படுத்த படுக்கையை விட்டு எழுந்திருக்காதவர்களுக்கு சீதேவி என்று தான் நம்ம கல்லூரி அகராதியாகும்!'

"எழுந்திரியேண்டி!"

"என்னடி இது பெரிய தொந்திரவாய் போச்சு! மனுஷி எவ்வளவு அலுப்போடு படுத்திருக்கிருள்!"

"என்னடி அலுப்பு! இராத்திரி... யாராவது..!"

"இருக்கும், இருக்கும்! அவள் பெரிய அதிர்ஷ்ட சாலி தான்!"

"எங்கே கன்னத்தைக் காட்டுப் பார்க்கலாம்!"

சாந்தாவின் கல்லூரித் தோழிகள் அவளை எழுப்பியே உட்கார வைத்து விட்டார்கள்!

'பார்ட்டை புடிஞ்சு ஒருவாரமாகுது இன்னும் என்னடி

உனக்கு இங்கே வேலை!'' ஒரு மாணவி இப்படிக் குறும்பு பேசினாள்!

"அந்தப் பரீட்சை முடிந்தது விட்டால் போதுமா?'' இன்னொரு மாணவி இப்படிப் புதிர் போட்டாள்!

''வேறென்னடி அவளுக்குப் பரீட்சை இருக்குது!'' இன்னொருத்தி தூண்டி விட்டாள்!

''அதுதாண்டி வாலிப பரீட்சை!''

''அப்படின்னு?'' ஒன்றும் தெரியாதவள் போல் விளக்கம் கேட்டாள்!

''அப்படின்னு! காதல் பரீட்சை என்று பெயர்''! ஒருத்தி விளக்கம் தந்தாள்!

''அது வேறு எழுதுகிருளா?''

''இல்லேன்னு! இப்படி பத்து மணி வரை தூங்குவாளா?''

சாந்தாவுக்கு இந்த பரிகாசமெல்லாம் ஒரு விதத்தில் இன்பமாகவும். மகிழ்ச்சியாகவுமே இருந்தது! சாந்தா எதற்கும் வாயைத் திறக்கவே இல்லை!

''ஏண்டி! பிரயாணம் எப்போ?' ஒரு மாணவி சாந்தாவைப் பார்த்துக் கேட்டாள்!

''நைட்டு! இண்டோ சிலோன் எக்ஸ்பிரசில்.

''முண்டம்! இண்டோ சிலோன எக்ஸ்பிரஸ் இல்லையடி! அதுக்குப் பெயர் தனஸ்கோடி எக்ஸ்பிரஸ்!

''சரி தாண்டி போடி! பெரிய உண்மையைக் கண்டு பிடிச்சுட்டே! ஏதோ ஒரு வண்டி! சாந்தா அலுத்துக் கொண்டாள்!

''தனியாவா? ஏதாவது ஜோடியோடா?

''ஸ்டேஷனக்குவா! தெரிஞ்சிக்கிலாம்!'' சாந்தா கொஞ்சம் திமிரோடுதான் பதில் சொன்னுள்!

'சரி, சரி! மூட்டையெல்லாம் கட்டு—ஸ்டேஷனில் சந்திக்கிரேம்!' தோழிகள் அந்த அறையைவிட்டுப் புறப்பட்டு போனுர்கள்!

சாந்தாவின் உள்ளம் மட்டும் எங்கெங்கோ பிரயாணம் செய்துக் கொண்டிருந்தது!

6
யாரோ?
அவர் யாரோ?

தனசேகரம் பிள்ளை தான் வீட்டு வாசற்படியில் பொறி பறக்கும் கண்களோடு நின்று கொண்டிருந்தார்! 'மடப்பயல்! அற்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிக்கக் கிளம்பி விடுகிருர்கள்!'' என்று முணுமுணுத்துக் கொண்டே இருந்தார்!

''ஏண்டா கந்தா! உன் மனசிலே என்ன தான் நினைச்சிக்கிட்டு இருக்கே!''

''என்ன எஜமான் அப்படி கேக்கிறீங்க!''

''யாருடா எஜமான்? நீயா? நானு?''

''எஜமான்! எண்ணைக்கும் உங்களுக்குத் துரோகம் செய்ய மாட்டேன் எஜமான்!

''நீ, இப்போ பெரிய மிராசுதார்! எனக்கு பணிஞ்சி போவியா?''

''ஏன் இப்படி கோபமா பேசுறீங்க எஜமான்?''

''நம்ம குழந்தை காலை வண்டிக்கு வரப்போவுது! ஸ்டேஷனுக்கு வண்டி கொண்டுபோக ஒரு நாதியும் இல்லையேடா!''

''இதோ போறேன் எஜமான்'' கந்தப்பன் வேக வேகமாக ஓடி வண்டியைப் பூட்ட ஆரம்பித்தான்!

''ஜில், ஜில்'' என்ற சலங்கை ஒலியோடு வண்டியை வெகு வேகமாக ஸ்டேனுக்கு ஓட்டிச் சென்ருன்! தனஸ்கோடி எக்ஸ்பிரஸ் ஸ்டேஷனை அடைவதற்கும் இந்த மாட்டு வண்டி—இல்லை, இல்லை—மேற்சத்தி சீமை மாடுகள் பூட்டிய இந்த வில் வண்டி ஸ்டேஷனை அடைவதற்கும் நேரம் சரியாக இருந்தது!

''என்னடா கந்தா! சௌக்கியமா?'' சாந்தா க்ஷேமம் விசாரித்துக் கொண்டே ரயிலை விட்டு இறங்கினுள்!

''ஆமாம், அம்மா! உங்க புண்ணியத்திலே சௌககியமாகத் தான் இருக்கிறேன்!'' என்று கூறிக் கொண்டே சாந்தாவின் பெட்டி, படுக்கைகளை, எடுத்து வந்து வண்டியில் வைத்தான்!

சாந்தா வண்டியில் ஏறிக் கொண்டாள்! மீண்டும், ''ஜில் ஜில்'' ஒலியைக் கிளப்பி அந்த சீமை மாடுகள் வண்டியை இழுத்துக் கொண்டு மறந்தன!

''கந்தா! இந்த மாடு நம்ம மாடு தானு?''

''ஆமாம், அம்மா! இந்த மாடு நம்ம மாடுதான்!''

''விலை என்னடா!''

''அது முழுங்கிடும்சுங்க, அப்படி, இப்படின்னு பாத்தா இரண்டாயிரத்துக்குக்கிட்டதட்ட வந்திடிச்சுங்க!

''இவ்வளவு ரூபாய்க்கு எதற்குடா இப்ப மாடு வாங்கனும்?''

''ஊரிலே, பெரிய பண்ணையா இருந்து கிட்டு ஒருத்தன் கிட்ட இரவல் கேட்க முடியுமா, அம்மா!''

''ஏன் வாங்கக் கூடாதா?''

''இல்லிங்கம்மா!' ஒரு. நாளு சின்னப் பண்ணை வேதாசலம் அய்யா கிட்டே மாடு இரவல் வாங்கப் போனேம்!'' ஏண்டா கஞ்சப் பசங்களா! ஒரு ஆயிரம் போட்டு மாடு வாங்கிஞ என்ன?' என்று திட்டி அனுப்பிச்சு விட்டார்; அண்ணைக்கே இந்த மாட்டை வாங்கி புட்டோம்,'' கந்தப்பன் ஒரு சதையே சொல்லி முடித்து விட்டான்.

''ஏன்? வேதாசலம் பிள்ளைக்கும், உங்க எஜமானுக்கும் ஏதாவது சண்டையா?'' சாந்தா மெதுவாக துப்பறியும் வேலையில் ஈடுபட்டாள்.

''என்னுங்க அம்மா; புது சாகேக்கிறீங்ளே; அந்த திமிர் பிடித்த வனேடு யாருங்க ராசியா இருக்க முடியும். அப்பன் கூட பரவாயில்லை போலிருக்கு, பிள்ளை மகா மண்டைக் கனம் பிடிச்சவன்.''

''ஏன்?'' சாந்தாவுக்கு இந்த அக்கறை ஏன்?

''நாலு எழுத்து படிச்சுட்டான் பாருங்க.''

''அவர் மகன் படிச்சு இருக்கிருரா? படிச்சுக்கிட்டு இருக்கிருரா?'' சாந்தா சந்தேகத்தைப் போக்கிக் கொள்ள எண்ணினுள் போலும்.

''அவர் போன வருசமே படிப்பை நிறுத்தி விட்டு வந்து விட்டாருங்களே.''

''நம்ம ஊரிலே இருந்து யாராவது பட்டணத்துக்குப் போய் படிக்கிருங்களா ?''

ஓ எத்தனையோ பேர் படிச்கிருங்களே. சண்முகம் பிள்ளை மகன் வக்கிலுச்குப் படிச்கிருரு. முருகப்ப முதலியார் பிள்ளை இன்ஜினியர் வேலைக்குப் படிக்கிருரு. சொக்கலிங்கம்பிள்ளை மகன் வார்த்தியார் வேலைக்குப் படிச்கிருரு என்று கந்தன் பட்டியலை நீட்டிக் கொண்டே போனுன்.

''இவ்வளவு பேரு படிக்கிருங்களா?''

''நம்ம பையன் கூட பட்டணத்திலே தான் படிக்கிருன்.''

''யாரு, உன்னுடைய மகனு?''

''ஆமாம், அம்மா.''

''எதுக்குடா படிக்க வைச்சிருக்க''

''என்னங்க அம்மா அப்படிக் கேக்கிறீங்க. என் மகன் படிக்கக் கூடாதுங்களா?''

''படிக்க கூடாதுன்னு யாருடா சொன்னு? என்ன வேலைக்குப் படிக்க வைச்சிருக்க.''

''அதுதாம்மா டாக்டர் அய்யா வேலைக்கு'' கந்தன் தலையை சொறிஞ்சி கொண்டே சொன்னுன்.

''உன் மகன் டாக்டர் வேலைக்குப் படிக்கிருனு? அப்ப நீ ரொம்ப அதிர்ஷ்டசாலி தான்'' சாந்தா எதை எண்ணிக் கொண்டு இப்படிச் சொன்னுளோ தெரியவில்லை! ஆனல் சாந்தாவின் உள்ளத்தில் ஏனே அமைதியில்லை. அவளுடைய நெஞ்சம் சடல் அலை போல் பாய்ந்துக் கொண்டிருந்தது.

''யார்? அவர் யார்?'' இந்த வினவுக்கு தெளிவான விடை, அவளுக்கு இன்னும் கிடைக்கவில்லை போலும்.

''அம்மா இறங்குங்க வீடு வந்தாச்சு'' என்ற சந்தனுடைய குரல் அவளை இந்த உலகத்திற்கு அழைத்து வந்தது.

சாந்தா வண்டியை விட்டு இறங்கி உள்ளே சென்ருள்.

(வளரும்)

ஜூன் 1 முதல் எங்கும் கிடைக்கும்!

திரைத்தந்தி

சினிமா மாதமிருமுறை

ஆசிரியர்: சௌந்தி

★ சினிமா கார்ட்டுன்கள்

★ புதுமுறை விமரிசனம்

★ சுவையான படப்பிடிப்பு செய்திகள்

இன்னும் பல புதுப்பகுதிகள்

எட்டு பக்கம் :: விலை 13 காசு

எங்கும் விற்பனையாளர்கள் தேவை

திரைத் தந்தி, 54, நல்லப்ப வாத்தியார் தெரு, சென்னை-21.

நாட்டு மக்களுக்கு விடுதலை உணர்ச்சியை ஊட்டவே கழகம் பணியாற்றி வருகிறது !

(கருணாநிதி பேச்சு)

(5ம்-பக்கத் தொடர்ச்சி)

தைத் தவிர வேறென்ன எங்களுக்கு வேலை.

மிருதங்கக்காரன் பாட்டிற்கு தகுந்தாற் போல் மிருதங்கம் அடிப்பான். அவன் வீட்டிற்கு சென்று மழலை மொழி சிந்திடும் தன் அருமைக் குழந்தையை தூக்கி வைத்துக் கொண்டு அதன் முதுகில் மிருதங்கம் அடிப்பது போல் அடித்துக் கொண்டிருப்பான். தன் மனைவியோடு காதல் மொழி பேசி கொஞ்சிக் குலாவிடும் போதும், தன் மனைவியின் மாம்பழக் கன்னத்திலே மிருதங்கம் அடிப்பது போல் தட்டிக் கொடுப்பான்.

மிருதங்கக்காரனைப் போல் திராவிட முன்னேற்றக் கழகத்தாரகிய நாம் எங்கு சென்றாலும் எங்கு பேசினாலும் நமது இலட்சிய முழக்கமான "திராவிட நாடு; திராவிடருக்கே" என்பதைத் தான் வலியுறுத்துகிறோம்.

திராவிடநாடு திராவிடருக்கே என்பது நம்உதிரத்தோடு ஒன்றி விட்டது. உடலிலே உயிருள்ள அளவிலும் "திராவிட நாடு; திராவிடருக்கே என்று கூறுவது தான் நமது வேலை,

நாம் நாட்டு விடுதலையைக் கேட்கிறோம். நாடு விடுதலையடைய வேண்டுமென்று தான் பேசுகிறோம். இதைக் கேட்ட நிதியமைச்சர் சுப்பிரமணியம் சொல்லுகிறார், "உலகில் பிரிந்த நாடுகளெல்லாம் ஒன்று சேருகிறது திராவிட முன்னேற்றக் கழகத்தார் மட்டும் ஏன் நாடு பிரிய வேண்டுமென்று கேட்கிறார்கள்" என்று பேசியுள்ளார்,

உலகில் நடப்பவைகளை இவர் அறியாதவராயிற்றே? அதனால் இவர் அப்படி பேசியுள்ளார். நிதியமைச்சர் சுப்பிரமணியத்திற்கு உலக நாடுகள் சபையின் தலைவர் அழகான பதிலை தந்துள்ளார். பிரிந்த நாடுகள் ஒன்று சேரவில்லை. நாடுகள் பிரிந்து கொண்டே தான் இருக்கிறது.

ஐக்கிய நாட்டு சபை ஆரம்பத்தில் 57 நாடுகள் இருந்தது. இன்றைய தினம் 82 நாடுகள் இருக்கிறது. என்று அவர் கூறியுள்ளார். அகில உலக அரசியல் அறியாதவர்கள், அரசியல் கணக்கியலைத் தெரியாதவர்கள் இப்படிப் பேசுகிறார்கள். ஐக்கிய நாடு சபை ஆரம்பத்திலே 57 நாடுகள், இன்று 82 நாடுகளென்றால் நாடுகள் பிரிந்திருக்கிறதா? அல்லது பிரிந்த நாடுகள் சேர்ந்திருக்கிறதா?

அன்று 57 நாடுகள் இன்றைய நிலையில் 82 நாடுகள் எதிர்காலத்தில் 100 நாடுகளாகலாம் 1962ல் அந்த 18 நாடுகளிலே திராவிட நாடும் ஒன்று என்பதை நிச்சயமாக கூறுகிறேன். சென்னை அரசாங்கமும் அமைச்சர்களும் கிணற்றுத் தவளைகளாகத்தான் இருக்கிறார்கள். இவ்வாறு இருப்பவர்கள், பிரிந்த நாடுகள் ஒன்று சேருகிறது என்றும் நம்மை சேலிச் செய்கிறார்கள்.

திராவிடமுன்னேற்றக் கழகத்தார் கேட்கும் "திராவிட நாட்டை வேடிக்கை விளையாட்டென்று நினைக்காதீர்கள் உலகிலுள்ள 82 நாடுகளும் தனிநாடாகப் பிரிவதற்கு எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறது என்பது நமக்கு தெரியும். எவ்வளவு பேர்கள் தியாகம் செய்துள்ளார்கள் என்பதும் நமக்குத் தெரியும். அதே போல் நம் நாட்டு விடுதலைக்காக வட சென்னை பாண்டியன் உடையார் பாளையம் வேலாயுகம் தூத்துக்குடித் தங்கம் கே. வி. கே. சாமி இவர்களெல்லாம் திராவிட மொழி இன வாழ்வுக்காக தங்கள் உயிரை அர்பணித்தார்கள்.

விடுதலை இயக்கம் நம் நாட்டில் தீவிரமாக பரவவில்லையே தவிர நம் கருத்துக்கள் மூலை முடுக்கெங்கும் பரவி வருகிறது.

பாஸ்பரசை தண்ணீரில் வைத்திருந்தால் எரியாது வெளியே எடுத்தால் பாஸ்பரஸ் தானாக எரியும் நாம் கொளுத்த தேவையில்லை. பாஸ்பரசைப் போல் பல நாடுகள் விடுதலை உணர்ச்சியை பெற்றிருக்கிறது. கற்பூரம் தீக்குச்சியை கிழித்துக் காட்டினால் தான் எரியும். தீக்குச்சி உதவியின்றி கற்பூரம் எரியாது கற்பூரத்தை போல் சில நாடுகளில் விடுதலைஉணர்ச்சி தீயென பரவியுள்ளது

நமது நாட்டில் விடுதலை உணர்ச்சி என்பதே கிடையாது, நம் நாட்டுமக்கள் பாஸ்பரசைப் போன்றும் இல்லை கற்பூரத்தைப் போன்றும் இல்லை. நம் நாட்டு மக்கள் ஈற விறகாகவே இருக்கிறார்கள் திராவிட முன்னேற்றக்கழகம் ஈரவிறகை உலர்த்த பாடுபட்டு வருகிறது. அதை நன்றாக வெயிலில் உலர்த்த வேண்டும். அவர்களுக்கு விடுதலை உணர்ச்சி ஊட்டத்தான் நாம் அவர்களிடம் கூறுகிறோம். நாம் ஆண்ட இனம் இன்று அடிமையாக இருக்கிறோம். சேர, சோழ, பாண்டியன் வரலாற்றை எடுத்துக் கூறுகிறோம். மறுபடியும் அந்த பெருமை அடைய வேண்டுமென்று அவர்களுக்கு எடுத்துச் சொல்லுகிறோம் செங்குட்டுவனைப் பாருங்கள், தமிழர் பரம்பரையை கனக விசயன் என்பவன் பழித்தானாம். அதைக் கேட்ட செங்குட்டுவன் அவர்கள் தலையில் இமயமலையிலிருந்து கல்லை சுமக்கவைத்தானே! ஏன்? தமிழர்களை கேலி மொழி பேசியதற்கு, அவ்வாறு செய்திருக்கிறார்கள் நம்முன்னோர்கள்

அவர்கள் கால்வழி வந்தநாம் இன்று வடநாட்டானுக்கு அடிமையாகக்கிடக்கிறோம், கீர்த்திப் பெற்ற நம் தாயகத்தைச் சீழிந்து விட்டது ஆண்டவர்கள் நம் தாயகத்தை ஆள வேண்டுமென்கிறோம். தாயகத்தின், திராவிடத்தின் கீர்த்தி ஓங்க வேண்டுமென்கிறோம். இதை மக்களிடம் சொல்லி ஈரவிறகை காய்ந்த விறகாக மாற்றி விடுதலை உணர்ச்சியை எழுப்புகிறோம்.

அகிலஇந்திய காங்கிரஸ் தலைவரும். ஆந்திர மாநில முன்னாள் முதலமைச்சருமான சஞ்சீவி ரெட்டியார் நம்மை மனபூமியில் முளைத்த காளான் என்று பாண்டிச்சேரியில் சொல்லியிருக்கிறார் அங்கேதான் நம்புவார்கள். நாம் காளான் அல்ல; நாட்டுமக்களின் நலனைக் கவனியாது எதேச்சாதிகாரமாக இருக்கும் காங்கிரசை அழிக்க வந்த காலன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தார் ஆந்திரம், கன்னடம் மலையாளம் என்கிறார்களே!

இவர்கள் கட்சிக்கு அந்த மகாணங்களில் ஆதரவு இருக்கிறதா என்று கேட்கிறார்கள். எங்கள் கழகத்தலைமை காரியாலயத்தில் கேட்டால் அந்த மாநிலங்களில் உறுப்பினர்கள் இருக்கிறார்களா இலையா கிளைக் கழகங்கள் இருக்கிறதா இல்லையா என்பது தெரியும்.

நான் கூட சமீபத்தில் கேரளாவிற்கு ஐந்து கூட்டங்களுக்கு சென்றிருக்கிறேன். சுமார் 60 கிளைக் கழகங்கள் ஆந்திராவில் இருக்கிறது.

அது மட்டுமல்ல இன்னும் ஒன்று கூறுகிறேன். ஆந்திர மாநிலத்தில் கழக ஆதரவாளர் ஒருவர் இருந்தார். கழக கொள்கைகளை உணர்ந்தார் வடநாடு

(11ம் பக்கம் பார்க்க)

அற்பத்தனம்! இது அற்பத்தனம்!

அமைச்சருக்கு

இது ஆகாது ! தகாது !

"பரம்பிக்குளம் திட்டத்திற்கு கேரள சர்க்கார் போடும் முட்டுக்கட்டைக்குக் காரணம் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் போன்ற எதிர்க் கட்சிகளின் துவேஷப் பிரச்சாரமே காரணமாகும்" என்று நமது நிதி அமைச்சர் மிக்க மதி நூகத்தோடு கூறி வருகிறாராம் !

சாதாரணமானவர்கள் இப்படி ஒரு பொய்ப் பிரச்சாரததை செய்தால் நாம் அதைப்பற்றி கொஞ்சமும் கவலைப்படமாட்டோம்! ஆனால் நாட்டையாளும் அமைச்சரே ஓட்டுகளைப் பெற்று மீண்டும் மந்திரி நாற்காலியில் உட்காருவதற்காக இப்படி பொய்ப்பிரச்சாரம் செய்தால் நாம் எப்படி கவலைப்படாமல் இருக்க முடியும்!

அவருடைய பேச்சைக் கேட்டு ஒரு பக்கத்திலே சிரிப்பும், மற்றொரு பக்கத்திலே நகைப்பும் வேறொரு பக்கத்திலே பெரும் கவலையும் தான் ஏற்படுகின்றன!

"நாட்டையாளும் அமைச்சருக்கு ஒரு கட்சியின் கொள்கையைப்பற்றி, மிக சகதி வாய்ந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சியத்தைப் பற்றி கூட தெரியவல்லையே" என்பதை நினைக்கும் போது உண்மையிலேயே சிரிப்பு தான் வருகிறது!

திராவிடமுன்னேற்றக் கழகம் என்றுமே மலையாளத்து மக்களை எதிர்தது துவேஷப் பிரச்சாரம் செய்ததது கிடையாது! "மலையாளமும், தெலுங்கும், கன்னடமும் ஒன்று சேர்ந்து திராவிடர்களாய், திராவிடக கூட்டாட்சியில் வாழ வேண்டும்' என்று பாச உணர்ச்சியைத் தான் ஊட்டி வந்திருக்கிறது!

இந்த அமைச்சரே நம்மைப்பார்த்து—"கேரளம் கேட்டதா? கன்னடம் சம்மதித்ததா? தெலுங்கர்கள ஒத்துக் கொண்டார்களா?" என்று எத்தனையோ தரம் கிண்டல் செய்திருக்கிறார்! இப்போது கூறுகிறார் நாம் மலையாளிகளை எதிர்தது துவேஷப்பிரச்சாரம் செய்வதாக! எதை நம்புவது?

பரம்பிக்குளம் திட்டம் நிறைவேறாமல் நிற்பதற்குக் காரணமே பாரத புத்திரர்கள் தான்!

நிதி அமைச்சர் தகுதிக்கும், திறமைக்கும், அவர் வகிக்கும் பதவிக்கும் இது தகாது, தகாது, தகவே தகாது!

[அண்ணு பேச்சு]
[4-ம் பக்கத் தொடர்ச்சி]

மந்திரிபதவி வகிக்க நான் லாயக்கற்றவனு ?

அதிகாரிகள் திட்டங்களை நிறைவேற்ற பணம் இல்லையென்றவுடன் அந்த சீமான்களும் செல்வந்தர்களும், பங்களா வாசிகள் வரிகளை ஏமாற்றி வந்ததைக் கண்டு பிடித்தார்கள்.

பல வருடங்களாக ஏமாற்றி வந்ததைப் பார்த்துக் கொண்டிருந்த நமது தோழர்கள் சும்மா இருப்பார்களா? அவர்கள் பங்களாக்களில் வசித்து ஏமாற்றி வந்ததைப் பார்த்து பெருமூச்சு விட்டவர்களாயிற்றே.

உடனே குறைவாக இருந்த வரிகளையெல்லாம், நகர மன்றத்தை ஏமாற்றி வந்தவர்களையெல்லாம் கண்டு பிடித்து வரிகளை உயர்த்தினுர்கள், அதனுல் பல லட்ச ரூபாய்கள் வரும்படி வந்தது.

அதே நேரத்தில் அதிகமாக வரிகளைப் போட்டிருந்த ஏழை மக்களுக்கு வரியைக் குறைத்தார்கள். அப்படி குறைக்கப்பட்ட ஏழை மக்கள் 48 ஆயிரம் பேர்களாவார்கள்,

சென்னை நகரில் போய்க் கொண்டிருக்கும் பஸ்கள் மாநில சர்க்காரின் நிர்வாகத்தில் ஓடுகிறது, மற்றவர்கள் நிர்வாகத்தில் ஓடும் பஸ்களும் சென்னை நகரில் ஓடுகிறது. தனிப்பட்டவர்கள் நிர்வாகத்தில் ஓடும் பஸ்களுக்கு விதிக்கப்படும் வரிகளை மாநில அரசாங்கமே வசூல் செய்து கொள்கிறது.

ஆனுல் இந்த பஸ்கள் மூலம் பல லட்சக்கணக்கான ரூபாய்கள் சர்க்காருக்கு வரும்படி வருகிறது.

இந்த பஸ்கள் போகும் சாலைகள் சீர்படுத்துவதற்காக மாநகராட்சிமன்றம் பல லட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து வருகிறது

இந்த செலவுகளுக்கு மாநில துரைத்தனம் மாநகராட்சி மன்றத்திற்குக் கொடுத்து வருவது இரண்டு, மூன்று லட்சம் ரூபாய் தான். இதைப் பிச்சை கொடுப்பது போன்று மாநில அரசினர் கொடுத்து வந்தார்கள்.

இந்த நிலையை நமது தோழர்கள் பார்த்தார்கள் "பஸ்களின் வருவாயை நீங்கள் எடுத்துக் கொள்கிறீர்கள். ரோடுகளை பல லட்சம் ரூபாய்களைச் செலவு செய்து நாங்கள் சீர்படுத்துகிறோம், நீங்கள் கொடுக்கும் பணம் குறைவு இந்த ஆண்டிலிருந்து எங்களுக்கு அதிகப் பணம் தர வேண்டும், இல்லாவிட்டால் பஸ்கள் நிர்வாகத்தை எங்களிடம் ஒப்படைத்து விடுங்கள் என்று அரசினரிடம் கேட்டார்கள்

மாநில சர்க்கார் ' பார்த்தார்கள். இவர்கள் என்ன பஸ் நிர்வாகத்தையே நடத்துவதாக தெரிவிக்கிருர்கள். இது பெரிய சங்கடமாகி விடுமே என்றஞ்சி சாலைகள் சீர்படுத்தும் செலவிற்காக மாநில சர்க்கார் பதது லடசம் ரூபாய் தருவதாக ஒப்புக் கொண்டார்கள். இதை நமது தோழர்களால் தான் கேட்க முடிந்தது. முன்பு நிர்வாகத்திலிருந்த காங்கிரஸ்காரர்களால் கேட்க முடியவில்லை. அவர்கள் தீர்மானம் செய்து அனுப்ப முடிந்தது. நமது தோழர்கள் போராடி வெற்றி பெற்றுர்கள்

ஆனுல் நமது மாநில துரைத்தனத்தாரும், மாநில அமைச்சர்களும் நல்ல முறையில் பணியாற்றி வரும் மாநகராட்சி மன்றத்தைப் பற்றித் தப்புப் பிரச்சாரம் செய்து வருகிருர்கள்.

நகரமே நாற்ற மெடுக்கிறதென்றும், நகர மன்றம் நிர்வாகம் நல்ல முறையில் நடைபெறவில்லையென்றும் தப்புப் பிரச்சாரம் செய்வதில் முதன்மை பெறுபவர் நமது நிதியமைச்சர் சுப்பிரமணியம் தான். அவர் பேசுகின்ற இடத்திலெல்லாம் சென்னை நகரம் நாறுகிறது. கூவம் நதி நாறுகிறது என்று பேசி வருகிருர்.

சென்னை நகரம் நாறுகிறது என்பதற்கு நமது தோழர்கள் நல்ல பதிலைக் கூறியிருக்கிருர்கள்.

கூவம் நதி நிர்வாகம் மாநகராட்சி மன்ற நிர்வாகத்திலில்லை. சென்னை அரசினரின் நிர்வாகத்திலிருக்கிறது அந்த நாற்றத்தைப்போக்க சென்னை துரைத்தனத்தார் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள்?

ஆனுல் நமது தோழர்கள் மாநகராட்சி மன்றத்தின் மூலமாக இந்தக் கூவம் நதியை நல்ல முறையில் அமைக்கத்திட்டம் தீட்டி அரசினருக்கனுப்பியுள்ளார்கள்.

இந்தக் கூவம் நதியை ஆழப்படுத்தி இதில் படகுகள் போவதற்கான வகைகள் செய்யவும் யோசனை கூறியுள்ளார்கள் இதைப் பற்றி அரசினர் எந்த முடிவும் கூருதவாளக இருக்கிருர்கள்-

இலண்டன் மாநகரத்தின் மத்தியில் தேம்ஸ் நதிக்கரை இருக்கிறது, இது மிக அழகாகவும், பார்ப்பதற்கு மிகவும் ரம்மியமாகவும் இருந்து வருகிறது.

உலக நாடுகளிலிருந்து இலண்டனுக்கு யார் வந்தாலும் அந்ததேம்ஸ்நதிக்கரையின் அழகைப் பார்த்து ரசித்துத் தான் செலவார்கள்.

சென்னைக்கு யாராவது வந்து சில தினங்கள் தங்க வேண்டுமென்று வருவார்களானுல் இரண்டுதினங்களிலேயே போக வேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்குப் பிறந்து விடுகிறது.

காரணம் இங்குள்ள கூவம் நதியின் நாற்றம் அவர்களால் சகிக்க முடியாது போய் விடுகிருர்கள் இலண்டன் நகரின் அழகைக் காட்டுவதற்கு தேம்ஸ் நதி இருக்கிறது. சென்னையின் பெயர் கெடுக்க கூவம் நதி இருந்து வருகிறது.

இந்த நிலையை நீக்க நமது தோழர்கள் திட்டம் தீட்டியிருக்கிருர்கள். இதை ஏன் மாநில அமைச்சர்கள் ஏற்று அமுலாக்கக் கூடாது. இத்தனை ஆண்டுகளாக எந்தவித முயற்சியும் செய்யாதிருந்து விட்டு ஏன்று சென்னை நகரம் நாறுகிறதென்று கூறினுல் இது நியாயமான செயலா நீங்கள் சிந்தித்துப் பாருங்கள்.

கூவம் நதியை, தேமஸ் நதியைப் போன்று அழகு செய்ய முடியாத கூவம் நதி நல்ல முறையில் இருந்தால் மக்கள் நல்ல முறையில் அனுபவிப்பார்களே மாலைப் பொழுதில் அங்கு அமர்ந்து இன்பமாக காலம் அழிப்பார்களே, நமது சிறுவர்களும் அங்கு விளையாடுவதற்கன வசதிகள் செய்தால் அவர்களும் அங்கு விளையாடிப் பொழுதைப் போக்குவார்களே இதையேன் நமது துரைத்தனம் செய்யக் கூடாது. அங்கு பூங்காக்களை அமைத்து கடைகள் ஏற்படுத்தினுல் மக்கள் அதிகமாக கூடி சென்னை நகருக்கு நல்லஅழகை உண்டாக்குவார்களே இதை எண்ணியே நமது தோழர்கள் அரசினருக்குத் திட்டம் தந்துள்ளார்கள். இதை உடனே அரசினர் செய்தால் ஏன் சென்னை நகரம் நாறுகிறது

இதைச் செய்வதற்கு நமது மாநில அமைச்சர்களுக்கு எந்த வித அதிகாரமும் கிடையாது. இதற்கு டில்லியின் அனுமதி பெற வேண்டும் இங்கு பொருளாதார வசதி இல்லாததால் அவர்களிடம் பணம் கேட்க வேண்டும்.

இதை யெல்லாம் உத்தேசித்துத் தான் மாநில அரசு ஒன்றும் செய்யாது இருக்கிறது.

இந்த மாதிரி நிலைமையையெல்லாம் பார்த்துத் தான் நமது நாடு நமதாக வேண்டும்! நமது நாட்டிற்கான வசதிகள் செய்ய நமக்கு அதிகாரம் இருக்க வேண்டும.

நமது நாடு டில்லியின் பிடியிலிருந்து விடுபட வேண்டும் என்று கூறி வருகிறோம். இதை நாட்டு மக்களிடம் பரப்பி வருகிறோம்.

இதை வைத்து நமது மாநில அமைச்சர்கள் நம்மை கேலியும், கிண்டலும் செய்கிருர்கள் இவர்கள் அடுக்கு மொழியில் பேசுகிருர்கள், அழகான தமிழில் பேசுகிருர்கள் இதனலெல்லாம் செய்துவிட முடியுமா? "இந்த அண்ணுதுரையால் என்ன செய்ய முடியும் பள்ளிக்கூடம் கட்டுவாரா? மருத்துவமனை கட்டுவாரா, பாலம் கட்டுவாரா? என்றெல்லாம் கேட்கிருர்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் அழகாக மேடைகளில் பேசி விட்டால் இதை யெல்லாம் செய்து விடுமா என்றும் நம்மைக் கேட்கிருர்கள்.

நாம் இதை இப்பொழுது செய்ய முடியாது என்பதை வெகு தைரியமாக—பெருமையோடு வெட்க மில்லாது ஒப்புக் கொள்கிறோம்.

நம்மால் எப்படி முடியும்? நாம் என்ன மந்திரவாதிகளா? அல்லது நந்தனா, கையை நீட்டி. "பள்ளிக்கூடம் வரக்கடவது," "மருத்துவமனை வரக்கடவது" "ரோட்டு வரக் கடவது" என்று கூறி வரழைப்பதற்கு வரிகள் வாங்கி பணம் வைத்திருப்பது இவர்கள். அதற்காக மந்திரிகளாக அமர்ந்து ஆட்சி செய்வது இவர்கள். நம்மைப் பார்த்து உங்களால் செய்ய முடியுமா என்று வெட்கமில்லாது கேட்கிருர்கள்,

மக்களிடமிருந்து பணம் வாங்கி வைத்திருப்பவர்கள் நீங்கள் தான் மக்கள் வசதிக்கானவைகளை யெல்லாம் செய்ய வேண்டும்.

இதைவிட்டு "அண்ணுதுரை என்ன செய்தான்' 'அவனுக்கு என்ன தெரியும் என்று கேட்டு விட்டால் போதுமா? உன் கடமையைச் செய்ததாகிவிடுமா?

பொறுப்பை-நிர்வாகத்தைஎங்களிடம் கொடுத்துப் பார்— செய்கிறோமா இல்லையா என்று கவனித்துக் கொண்டுவா அப்படி நாங்கள் செய்யா விட்டால் மக்களிடம் வந்து எங்களை ஒன்றும் செய்ய முடியாதவர்கள் கையாலாகதவர்கள் வெறும் பேச்சுக்காரர்கள் என்று கூறு, எங்களிடம் உனக்குக் காரியமாற்ற முடியவில்லை வெளியே போ" என்று தைரியமாகக் கூறு.

இன்று ஆட்சிப் பொறுப்பிலிருக்கின்றவர்கள் செய்கின்ற தவறைக் கண்டிக்க மக்களிடம் எடுத்துக்கூறவேண்டிய கடமை எங்களுக்கிருக்கிறது. நாங்கள் எதிர்க் கட்சியில் இருக்கிறோம் நாங்கள் கூறும்குறைகளை நீக்கிக் கொள் அப்படி நாங்கள் சொல்வது உனக்குப் பிடிக்கவில்லையென்றுல் "பாக்கிஸ்தான்" போல் செய்து விடு

நமது தோழர்கள் இனி என்ன செய்யவேண்டும்என்பதை நன்கு உணர்ந்து கொண்டு நமது கடமைகளை நன்கு செய்ய முன்வர வேண்டும்

இன்று நாம் செய்துள்ள பணிகளை மக்கள் நன்கு உணரும்படி செய்ய வேண்டும வளர்ந்துள்ள நாம் இந்த வளர்ச்சியை நன்கு கட்டிகாத்து வரும்படி கேட்டு கொண்டு இதோடு முடித்து விடைபெறுகிறேன்

வணக்கம்

கலைஞர் கருணாநிதி

தேர்தல் உண்டியலைத் திறந்து, நம் ஆட்சிக் கொடியை கோட்டைக் கொடி மரத்தில் ஏற்றி வைத்தார்!

சென்னையில் பெருவிழா! உண்டியல் திருவிழா!

2 ஆண்டில் சென்னையின் பங்கு இலட்சமாக இருக்க வேண்டும்!

மாலைமணிக்குப் பாராட்டும். நன்றியும்!

சென்ற ஞாயிற்றுக்கிழமை சென்னை திருவல்லிக்கேணி வட்டாரம் பெருமையோடு விழாக் கோலம் பூண்டு மகிழ்ந்து கிடந்தது!

"அரசியல் இருட்டை விரட்டியடிப்போம்" என்று பெருமையோடு வீதியெங்கும் மின் விளக்குகள் பேரொளியைப் பரப்பி ஜொலித்துக் கொண்டிருந்தன! வண்ண வளைவுகள், பறந்தாடும் இருவண்ணக் கொடிகள் எல்லாம் மனதைக் கொள்ளை கொள்ளும் காட்சியாக இருந்தன!

"எதற்காக இந்த விழா? எவர் நடத்தியது இந்தத் திருவிழா" என்று பலர்—அதிசயத்தோடும், ஆச்சரியத்தோடும், ஆவலோடும் கேட்கக் கூடும்!

பெருமைக் குரிய நமது பெருந்தகை, பேராற்றல் படைத்த நமது பேரறிஞர் அண்ணா அவர்கள் இட்ட அன்புக் கட்டளையை நிறைவேற்ற தான் இந்தப் பெருவிழாவை நடத்தினர், இந்தத் திருவிழாவைக் கொண்டாடினர்!

"கட்டளையை நிறைவேற்றத் திருவிழாவா?" ஆமாம் நண்பர்களே, ஆமாம்! இந்த பெரும் அதிசயம ஒரே ஒருவருக்குத் தான் நடக்கும், நடந்தது! எந்த ஒரு தலைவனுக்கும் காட்டாத மரியாதையை, பெருமையை எங்கள் அறிவுலக மேதைக்கு மக்கள் காட்டி விட்டனர்!

பாடம் பெறுவார்களா?

சென்னை, திருவல்லிக்கேணி 72-வது வட்டம் டாக்டர் தருமாம்பாள் படிப்பகத்தைச் சார்ந்த நண்பர்கள்-எங்கள் அறிவுலக மேதையின் கட்டளைப்படி தேர்தல் நிதி சேர்க்க உண்டியல் வைத்த காட்சி தான் இந்த பெரும் காட்சியாகும்!

கலைஞர் கருணாநிதி இந்தத் தேர்தல் உண்டியலைத் திறந்து வைத்தார்—இவலை இல்லை சென்னை கோட்டைக் கொடி மரத்தில் நமது ஆட்சிக் கொடியை ஏற்றி வைத்தார்!

உண்டியலைத் திறந்து, காங்கிரஸ் ஆட்சியை விரட்டியடிக்க வீரர்களை அழைத்தார்! உண்டியல் திறக்கப்பட்ட ஒரு இரண்டு மணி நேரத்திற்கெல்லாம் நூறு ரூபாய்க்கு மேல் சேர்ந்தது! கலைஞர் கருணாநிதி 1000 புதிய காசுகளை அந்த உண்டியலில் போட்டு ஒரு ஆயிரம் அக்கிரமங்களை ஒழிக்க, அநீதிகளை அழிக்க வழி காட்டினர்!

"அடுத்த ஆண்டு இரண்டாயிரத்தைச் சேர்ப்போம்" என்று வாககளித்த படிப்பகத்தினருக்கு ஆர்வ மூட்டினார்! தேர்தல் காலத்திற்குள் சென்னை மக்கள் ஒரு இலட்சத்தை உண்டியலில் சேர்க்க வேண்டும என்று வேண்டுகோள் விடுத்தார்! "ஒரு இலட்சம் என்ன, இரண்டு லட்சம் தருகிறோம்" என்பது போல் கூடியிருந்த பத்தாயிரக் கணக்கான மக்கள் கையொலி எழுப்பி நம்பிக்கையை தெரிவித்துக் கொண்டனர்!

அறிஞர் அண்ணா அவர்கள் 'உண்டியல் வைத்து தேர்தல் நிதி சேர்க்க" சொன்ன நாள் முதற் கொண்டு—அதை வலியுறுத்தி, வலியுறுத்தி மக்களுக்கு ஆர்வம் காட்டி வந்த-மக்கள் ஏடாம் மாலைமணிக்கு கலைஞர் கருணாநிதி பாராட்டுரை வழங்கி நன்றி தெரிவித்துக் கொண்டார்!

"அறிஞர் அண்ணா அவர்கள் தேர்தலுக்கு நிதி சேர்க்க உண்டியல் வைக்கச் சொன்ன காலத்திலிருந்து நம்முடைய ஏடுகளெல்லாம் எழுதி மக்களுக்கு நல்ல ஊக்கத்தை ஊட்டி வந்தன! என்றாலும் நமது இயக்க ஏடுகளில ஒரே ஒரு ஏடு தான்—நண்பர் இளங்கோ அவர்களால் நடத்தப்படும் அந்த வார ஏடு—எந்தவிதமான மாச்சரியத்திற்கும் இடம் தராமல், தலைவர்களின் கருத்துக்களை வெளியிட்டு, நாளிதழ் செய்கின்ற பணியைப் போல் நல்ல பணியைப் புரிந்து வரும் "மாலைமணி" தான் உண்டியலைப் பற்றி அடிக்கடி வலியுறுத்தி வந்திருக்கிறது! அந்த ஏட்டிற்கு-இந்த உண்டியலைத் திறந்து வைக்கின்ற நேரத்தில் நாம் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளோம்" என்று கலைஞர் கருணாநிதி அவர்கள் கூறினார்கள்!

உண்மையிலேயே இந்தப் புகழுக்கும், பாராட்டுக்கும் நாங்கள் காரணமல்ல! பேரறிஞர் அண்ணா அவர்கள் மீது வைத்திருக்கின்ற "அன்பும், மதிப்பும், நம்பிக்கையும்—அவர் தந்துள்ள கொள்கையின் மீதுள்ள பற்றும், பாசமும்—அதை பரப்பி நாட்டை விடுவிகக வேண்டும் என்ற நல்லெண்ணமும் தான் "இதற்குக் காரணமாகும்!'

"தேர்தல் காலத்திற்குள் ஒரு இரண்டு, மூன்று இலட்சம் வரை உண்டியல் மூலம் வசூலாகி, வெற்றி பெற்று நாட்டிலே நல்லாட்சி மலர்கின்ற போது தான்—எங்களின் உண்மையான பணி வெற்றிபெற்றதாகநினைத்து அக மகிழ்வோம்!

இந்த பெரும் பணியை கலைஞர்கருணாநிதி போன்ற ஆற்றல் படைத்த தலைவர்களால் தான் செய்ய முடியும்! அவர்கள் செய்யும் பணிக்கு மாலைமணி பக்கம் நின்று ஊக்குவிக்கும், கொள்கை ஒன்றே எங்களது இலட்சியம் என்பதை மனதில் கொண்டு பணிபுரிவோம் என்று நாங்கள் இந்த சமயத்தில் உறுதியளித்துக் கொள்ளுகிறோம்.

பெரும் விழா நடத்தி தேர்தல் நிதி உண்டியலைத் திறந்து வைத்து, தமிழகத்திற்கு வழி காட்டிய டாக்டர் தருமாம்பாள் படிப்பகத்தினருக்கு எங்கள் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்,

உண்டியல் பாரீர்! உண்டியல் பாரீர்!

வருகிற பொதுத்தேர்தலில் சர்வாதிகாரம் பிடித்த காங்கிரஸ் கட்சியை வீழ்த்தவும், நாட்டிலே நல்லாட்சியை மலரச் செய்யவும் அறிஞர் அண்ணா அவர்கள அன்பு கட்டளைபடி உண்டியல் வைத்தோரின் பட்டியலை கிழே தருகிறோம்.

[22-5-60 முடிய]

வீட்டுக்கொரு உண்டியலை வையுங்கள்!

நாட்டை மீட்டுத் தாருங்கள்!

மாலைமணி அலுவலகம்

ஆசிரியா	பி. எஸ். இளங்கோ	50—00
	ஏ. சங்கரய்யா	4—00
	கே. தங்கவேலு	4—00
	ஏ. மாசிலாமணி	4—00

73வது வட்டம்

நகரமன்ற உறுப்பினர்	தி. துரைக்கண்ணு	10—00

டாக்டர் தருமாம்பாள் படிப்பகம்

உண்டியல் துவக்க விழாவில் சேர்ந்த பணம்	100—00
கலைஞர் கருணாநிதி உண்டியலில் போட்டது (1000 புதிய காசுகள்)	10—00
ஜி. முருகேசன், திருவல்லிக்கேணி,	5—00
என். வடிவேல் உஷா முடித்திருத்தும் நிலையம் திருவல்லிக்கேணி	4—00
பெங்களூர் சைவாக்கபுரம் மு. மதிமாறன்	20—00

(தொடரும்)

நம் கழகத் தலைவர் பெயர் தெரியாதாம் சஞ்சீவி ரெட்டியாருக்கு!

இதை அறியாதவர் தான் இந்தியக் காங்கிரஸ் தலைவர்!

நீதிமன்றத் தீர்ப்புக்கு முதன் மந்திரி நமமீது குற்றம் சாட்டுகிறார்!

(கருணாநிதி பேச்சு)

(8ம் பக்கத் தொடர்ச்சி)

சாம் கொடுக்கும் பணத்தை உண்டு வாழ்கிறது.

தென்னகத்தின் நன்மைக்கான எந்தத் திட்டங்களும் வகுக்கவில்லை தெற்கிலுள்ளவர்களுக்கு அதனால் எந்தவித நன்மையும் கிடையாது என்று கூறி வந்தார், இவர் பொறுப்பான பதவியில் இருந்தவர் ஆனால் அவர் 8 அணா கொடுத்து உறுப்பினர் ஆகவில்லை. கழகக் கொள்கைகளை உணர்ந்து டெல்லி ஆட்சியை குறை கூறியவர்.

அகில உலக அரசியல் மேதை ஆசிய ஜோதி நேரு பண்டிதர் பார்த்தார். "ஆந்திர மாநிலத்தில் வடக்கு — தெற்கு என்று பேசுகிற அந்த ஆளை இங்கே— இழுத்துவா', என்றார். உடனே அவரை டில்லிக்கு அழைத்து வந்தார்கள்.

அவருக்கிருந்த பதவியைப் பிடுங்கிக் கொண்டார், இந்த பிடி சாபம் என்றார். "நீங்கள் தான் அகில இந்திய காங்கிரஸின் தலைவர் என்றார். அந்த பதவியை ஏற்று தான் ஒரு வடநாட்டு தாசனுதாசன் என்பதற்காக கங்கணம் கட்டிக் கொண்டார். அவர் யாரென்று தெரியுமா! அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தலைவர் சஞ்சீவி ரெட்டி தான்!

திருச்சியில் ஓர் பொதுக் கூட்டத்தில் திரு சஞ்சீவிரெட்டியார் பேசும் போது கூறினாராம். மேடையில் முளைத்த காளானாகிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் யாரென்று தெரியவில்லை என்று சொல்லி அருகிலிருந்த அரியலூர் அழகேசனை பார்த்தாராம். அவர் நமது அண்ணாவை நினைவூட்டினாராம். நான் உண்மையிலேயே அவர்மீது அனுதாபப்படுகிறேன். பாவம், ஒரு எதிர்கட்சித் தலைவரின் பெயரைத் தெரியாமல் தலைவர்பதவியிலிருக்கும் அவர்மீது. பரிதாபபடுபடுகிறேன், இதைக்கூட அறிந்து கொள்ள முடியாதவர் எட்டடி காங்கிரஸ் தலைவராக வந்தார். அரியலூர் அழகேசனும் சஞ்சீவி ரெட்டியும் வேக வேகமாக நம்மையும் நமது கழகத்தை அழிக்க தீவிரமாகச் சுற்றி வருகிறார்கள்

மாயவரத்தில் ஒரு மாநாடு நடந்தது அதில் நம் முதலமைச்சர் காமராசர் பேசினாராம்! அதை மாயவரம் நண்பர்கள் என்னிடம் சொன்னார்கள். காமராசர் பேசினாராம், "திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கொள்கை கிடையாது. அது கொள்கையற்றகட்சி, கொள்கை இருந்தாலும் அது பெரியார் கொள்கைதான், சொந்தக் கொள்கையற்றகட்சி கடவுள் இல்லையென்று கூறும் கட்சி திராவிடமுன்னேற்ற கழகத்தினர் ஏன் பொதுவுடமைக் கட்சியோடு சேர்ந்திருக்கின்றனர். ஏன் ஆச்சாரியாருடன் சேர்ந்திருக்கிறார்கள். ஏன் பார்ப்பனரான ராமமூர்த்திக்கு ஓட்டுப்போட வேண்டும் உங்கப்பா பெரியாருடன் போய் சேர்ந்து கொண்டால் என்ன? அல்லது காங்கிரசில் வந்துசேரக் கூடாதா?' என்றாராம் இதைதாண்டார்கள் வருத்தத்துடன் சொன்னார்கள் நான் கேட்கிறேன். "அப்படியானால் காங்கிரஸ் கொள்கையற்ற கட்சிகளை கூட்டி வைத்து கும்பமேளம் அடிக்கும் ஒரு கூடாரமா?

எங்களுக்கு தனிப்பட்ட பார்ப்பனர்கள் விரோதிகளில்லையே நாங்கள் கடவுள் இல்லையென்று சொல்லவில்லை. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று தானே சொல்லுகிறோம் அதற்கு உதாரணம் வேண்டுமென்றால் எங்கள் அண்ணா எழுதிய வேலைக்காரியைப் பாருங்கள் அதில் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற கொள்கையைப் புகுத்தி எழுதியுள்ளார் அப்படி நாங்கள் ஒன்றும் உங்களைப் போல் கொள்கையற்றவர்களல்ல

காமராசர் நம்மை தோற்றுவிட்டோம் என்று சொல்லுகிறார் நாம் தோற்றோம் பாண்டியிலே தோற்றோம் சிதம்பரத்திலே தோற்றோம் தூத்துக்குடியிலே தோற்றோம் நாங்கள் பகைப் பூர்வமாகத் தோல்வியை ஒப்புக் கொள்கிறோம் இல்லையென்று சொல்லவில்லை நாங்கள் தோற்றுவிட்டதால் நாங்கள் கேட்கும் திராவிடநாடு கொள்கை தோற்றுவிடவில்லை தேர்தலில் கட்சி தோற்றதால் அது அழிந்துவிட்டது என்பதல்ல

அதற்குமுன் 10 நிமிடம் கூட பேச முடியாத காமராசர் இன்று ஒரு மணி நேரம் பேசுகிறார் இடைவிடாது அதிக நேரம் பேசுகிறார் என்றால் இது யார் செய்த சாதனை திராவிட முன்னேற்றக் கழகம் செய்த சாதனையல்லவா?

காமராசர் அடுத்த தேர்தலில் வெற்றி பெற இப்போதிருந்த தேர்தல் பிரச்சாரம் செய்ய ஆரம்பித்து விட்டார். தஞ்சை திருச்சி மாவட்டங்களுக்கு செல்லுகிறார், தேர்தல்நிதி சேர்த்து திராவிட முன்னேற்றக் கழகத்தை அழிக்க எண்ணுகிறார். தொகுதிக்காக 80 லட்சம் சேர்த்து திட்டமிட்டு நிதி திரட்டுகிறார்.

மதுரை மாநிலத்திற்கு காமராஜா சென்றிருந்த பொழுது அங்கு பெரிய மிராசுதார்கள். பணக்காரர்கள் எல்லோரையும் கூப்பிட்டாராம். அடுத்த தேர்தலில் காங்கிரஸ் வெற்றியடைந்தால்தான் நீங்கள் வாழலாம் நீங்கள் நல்லமுறையில்வாழ்க்கை நடத்தலாம் என்று கூறயிருக்கிறார் உடனே அவர்கள் நாங்கள் 2 ஆயிரம் 3 ஆயிரம், என்று தருகிறோம். காங்கிரஸ் வெற்றி பெற்றால்தான் அவர்கள் நன்றாக வாழலாம் என்று நினைத்துக்கள்ள மார்க்கெட்டில் சேர்த்தபணத்தை மாயராஜரிடம் கொடுக்கிறார்கள்,

காமராசர் பொதுக்கூட்டங்களில் கூறுகிறாராம் திராவிட முன்னேற்றக்கழகத்தார்சென்னையில் பஸ்களை கொளுத்திவிட்டார்கள் இவர்கள் பஸ்ஸை கொளுத்தியதால் தான் 80 இலட்சம் ரூபாய் நஷ்டம் அவர்களுக்கு ஓட்டுப் போடாதீர்கள் இந்த 80 லட்சம் ரூபாய் இருந்தால் ஊரெங்கும் பள்ளிக்கூடமாவது கட்டியிருப்பேன் மாணவர்களாவது படிப்பார்கள் படிக்காத குறையை நான் பூர்த்தி செய்திருப்பேன் என்று சொன்னாராம்

நீங்கள் சுதந்திரப் போராட்டத்தில் தண்டவாளங்களை பெயர்த்தீர்கள் தபால் நிலையங்களை கொளுத்தினீர்கள் தந்தி கம்பங்களை பெயர்த்தீர்கள் அது அழகாக இருந்தது எவனோ ஒருவன் பஸ்ஸை கொளுத்தியதற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தார் தான் காரணமா?

எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் கடற்கரைக் கூட்டத்தில் பேசினார் கழகத்திலுள்ளவர்கள்—கழக உறுப்பினர்கள் பஸ்ஸை கொளுத்தியிருந்தால் நிச்சயமாக அவர்களை கழகத்திலிருந்து விலக்குவேன் என்றார்

அகில உலக அரசியல் மேதை; ஆசியாவின ஜோதி பண்டித நேரு தென்னகத்திற்கு பவனி வந்தார். அப்போது அவருக்கு நாம் கருப்புக் கொடி காட்டினோம் அப்போது யாரோ ஒரு அயோக்கியன் பஸ்ஸைக் கொளுத்தினான். அதற்கு எங்கள் கழகம் பொறுப்பா? இதன் காரணமாக பல கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டு வழக்கு நடந்தது. நீதிபதி விசாரணை நடத்தினார். இறுதியில் பஸ்கொளுத்தியதற்கும் கழகத்திற்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது என்று தீர்ப்பும் வழங்கிவிட்டார்.

நமது முதலமைச்சர் காமராசரே நீதிபதியின் தீர்ப்புக்கு மாறாக கழகம் தான் பஸ்ஸை கொளுத்தியது என்று பறைசாற்றி வருகிறார் இது சரியா? அவரே தீர்ப்பை அவமதிக்கிறார்

அகிம்சா மூர்த்திகளே 1942ம் ஆண்டை மறந்து விட்டார்களா? நீங்கள் அன்று அன்னியன் ஆட்சியை எதிர்த்து எவ்வளவு கொடுமைகளைச் செய்தீர்கள் அதை மறந்து விட்டீர்களா?

தூத்துக்குடியில் காங்கிரஸ் அமைச்சர்கள் வீட்டுக்கு வீடு சென்றார்கள் மந்திரிகள் ஆதிதிராவிட பெருமக்களிடம் சென்றார் ஊர்த்து அய்யர் பெண்களிடம் ஓட்டாடி சென்றார் மீனவர் பெருமக்களிடம் சென்றால் எல்லோரும் காங்கிரஸ் மந்திரிகள் என்ற முறையில் ஆதிக்கம் செலுத்தி ஓட்டைப் பெற்றீர்கள் பணத்தை வாரிவாரி இறைத்தீர்கள் ஓட்டு வேட்டை ஆடினீர்கள் இது தான் ஜனநாயகமா?

சாதியை ஒழிக்க பாடுபட்டு வரும் காமராசா அவர்கள் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசும் போது சிவசாமி நாடாருக்கு ஓட்டு போடுவீர்களா? சுந்தர்சிங் நாடாருக்கு ஓட்டுப் போடுவீர்களா? சிவசாமி நாடாருக்கு ஓட்டுப் போட்டால் அண்ணாத்துரை முதலியாருக்கு லாபம் சுந்தர்சிங் நாடாருக்கு ஓட்டுப் போட்டால் காமராசநாடாருக்கு லாபம் என்று கூறியுள்ளார் நீங்களே ஜாதி துவேஷத்தை ஏற்படுத்தி ஓட்டு வாங்கிறீர்கள்

இது போன்று தேர்தல் மோசடிகள் செய்தும் நீங்கள் பெற்ற வாக்குகள் 700 தான் அதிகம்.

மிகவும் மட்டரகமான ஏச்சாலும், பேச்சாலும், திராவிட முன்னேற்றக்கழகத்தை அழித்துவிட்டு இன்னும் ஓர் ஐந்தாண்டு ஆட்சியிலமர எண்ணுகிறீர்கள். 1962 முதல் 67 வரை நாடடைக் காடாக்கிச் செல்ல அரும்பாடுபட்டு தேர்தல் மோசடி செய்து வருகிறீர்கள்.

தேர்தல் மோசடிகள் செய்யும் காங்கிரசாரும் அமைச்சர்களுக்கும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன், தென் கொரியா சம்பவத்தை மறந்துவிட வேண்டாம். தென் கொரியாவின் ஜனாதிபதி சிங்மன்ரீ உதவி ஜனாதிபதி லீ என்பவர் இருந்தார். இருவரும் ஆட்சியைக் கைப்பற்ற தேர்தலில் தில்லுமுல்லுகள் செய்தார்கள். மக்கள் முன்னாலேயே இவர்களுக்கு வாக்களிட்டதில்லை என்ற முடிவு செய்து கொண்டார்கள்.

இப்படியிருந்தும் அவர்கள் இருவருமே வெற்றியடைந்தார்கள் இதைக் கண்டதும் பக்கலுக்கு வியப்பாக இருந்தது பக்கன் பன்றம் நீ ஓட்டுப் போட்டாயா? நீ ஓட்டுப் போட்டாயா? என்று அவர்களுக்குள்ளேயே கேட்டுக் கொண்டார்கள் எவரும் ஓட்டு போடவில்லை என்று சொல்லி விட்டார்கள் அப்படி இருக்கும் போது எவ்வாறு வெற்றி பெற்றார்கள் என்று சிந்தித்தார்கள் இவர்கள்வெற்றியில் மோசடிகள் இருப்பது கதரிந்தவுடன் மாணவர் படை கிளம்பியது. ஆட்சியை எதிர்த்தது தாய்மார்கள் படை திரண்டது பொது மக்கள் படை கிளம்பியது கோட்டையின் முன்னே சென்று போர் படை முழங்

(12ம் பக்கம் பார்க்க)

Registered as a News Paper in CEYLON
இலங்கையில் 20 சதம்
Regd. No.M.7074 MALAIMANI விலை 16 காசு Phone No.83-85

மக்களை துன்புறுத்திய சியாங்கேஷேக் பார்மோசாவில் பதுங்கினர்!

நம் மந்திரிகள் எங்கு பதுங்குவாரோ தெரியவில்லை!

(கருணாநிதி பேச்சு)

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

னர் கோட்டை முன்னே வேட்டுகள் கிளப்பியது தென்கொரியா ஜனாதிபதி சிங்மன்ரீ நிராயுதபாணியாக வெளியேற்றப்பட்டான்

உதவி ஜனாதிபதியாக இருந்த லீயின் கதி என்ன வாயிற்று தன் மனைவியுடன் மகனுடன் வீட்டில் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டான் தன் மகனிடம் துப்பாக்கியை கொடுத்து என் மானத்தைக் காப்பாற்ற என்னை சுட்டு விடு என்றான் தந்தை என்ற பாசம் ஒருபுற மிருந்தாலும் நாட்டிற்கு துரோகம் செய்ததற்காக மகன் தந்தையைச் சுட்டான் தாயின் கௌரவத்தைக் காப்பாற்ற தாயையும் சுட்டான் நம் குடும்பத்திற்கு மாசு ஏற்பட்டு நாமும் வாழக்கூடாது என்று எண்ணி தானும் சுட்டுக்கொண்டான் தேர்தல் மோசடி அந்த நாட்டில் எந்நிலைக்கு ஆளாக்கியது. ஒரு குடும்பமே நாசமாகி வீட்டில் 3 பிணங்கள் கிடந்ததே. மாற்றாரே—காங்கிரஸ்காரர்களே இதை மறந்து விடாதீர்கள்.

தேர்தலில் மோசடி செய்ததற்கு அந்த நாட்டில் அந்த கதி. தேர்தலுக்கு முன்பே இங்கு மோசடி — தில்லு முல்லுகள் செய்து வருபவாருக்கு எதிர்காலம் தான் புத்தி புகட்டும்.

இந்திய அரசினரே, அயல் நாட்டு வரலாற்றைப் பாருங்கள். சீனாவுக்கும் ஜப்பானுக்கும் போர் மூண்டதே சீனாவில் கோமிங் டாங் கட்சி என்று ஒன்று இருந்தது. அதற்காக பாடுபட்டவர் சியாங்கே ஷேக் கோமிங்டாங் கட்சி தான் புது வாழ்வுக் கட்சி. புது வாழ்வுக் கட்சி தலைவர் சியாங்கே ஷேக் ஜப்பானுடன் போரிட்டார். ஜப்பான் தோல்வியுற்றது சீனா வெற்றியடைந்தது. மக்கள் சியாங்கே ஷேக்கை பாராட்டினார்கள், மக்கள் புது வாழ்வு அளித்த வள்ளல் என்று கொஞ்ச நாள் பாராட்டினார்கள்.

சியாங்கே ஷேக் செய்த கொடுமைகள் நாளடைவில் மக்களுக்கு தெரிந்து விட்டது. அவன் செய்த அக்ரமங்களை மக்கள் புரிந்து கொண்டார்கள்.

சியாங்கேஷேக்கை மாசேதுங் தலைமையில் எதிர்த்தார்கள் மசேதுங்கின் தளபதியாகிய சூ என் லாய் பின்னே மக்கள் கூட்டங்களும் மாணவர் படைகளும் அணிவகுத்து நின்றது. சியாங்கே ஷேக்கை எதிர்த்தார்கள்.

அவரே பார்மோஷா தீவுக்கு ஓடிவிட்டார். சியாங்கே ஷேக்கிற்கு அந்த தீவாவது கிடைத்தது நமது அமைச்சர்களுக்கு—காங்கிரசாருக்கு எந்த தீவு கிடைக்கப்போகிறதே புதுவாழ்வுக் கட்சியின தலைவர் பார்மோசா தீவில் பதுங்கி கிடக்கிறார். நீங்கள் எந்த தீவில் பதுங்கப் போகிறீர்களோ தெரியவில்லை.

ஆகையினால் தேர்தல் மோசடிகள்—சதி திட்டங்கள் தீட்டும், ஆட்சியினருக்கு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தென் கொரியாசிங்மன்ரீ, லீ ஆகியோருக்கு ஏற்பட்ட கதி, சியாங்கே ஷேக்கிற்கு ஏற்பட்ட கதி நம் அமைச்சர்களுக்கு —காங்கிரசாருக்கு ஏற்படாமல் இருக்கும் என்று நாம் உறுதியாக சொல்ல முடியாது,

ஆகவே அமைச்சர்கள் எல்லாம தீவிரமாக சுற்றுப்பயணம் செய்கிறார்கள். அதில் நமது முதலமைச்சர் காமராசர் தஞ்சை திருத்தரணிக்கு சென்றிருந்தாரல்லவா. ஆடுதுறை விவசாய ஆண்டு விழாவில் காமராசர் கலந்து கொண்டார்! ஆடுதுறை சர்க்கார் அதிகாரி. விவசாயிகளுக்கு கடிதம் எழுதியுள்ளார், அதில் ஆண்டு விழாவிற்கு வரும் பொழுது நமது முதலமைச்சருக்கு ஆளுக்கொரு ரோஜா மலர் மாலை கொண்டு வாருங்கள் என்று எழுதியுள்ளார். ஏன் இவ்வாறு கடிதம் எழுத வேண்டும் நீங்கள் மக்கள் நன்மையை உணர்ந்து செயலாற்றியிருந்தால் மக்கள் உங்களுக்கு முன் இல்லாத ரோஜா மலர் மாலையாக கொண்டு வந்து சூட்டுவார்களே! எங்கள் வாழ்வுக்கு பாடுபடும் பூமானே! பெம்மானே! புதுவாழ்வளிக்கும் சீமானே என்று பாராட்டுவார்களே!

நாம் கூறுவதைக் கேட்ட குப்பை மேட்டு கோழிகள் கூவுகிறது அதன் வேலை, குப்பையை கிளறுவதும் கூவுவதும்தான். ஆகவே அதைப்பற்றி நாம் கவலைபடாது ஈரவிறகை காய்ந்த விறகாக மாற்றும் பணியில் ஈடுபட வேண்டும்.

நமது நண்பர் கோவிந்தசாமி சட்டசபையில் ஒருகேள்வி கேட்டார். 'ஏன் நம் நாட்டில் வளையல்களை செய்யக்கூடாது? கல்கத்தாவிலிருந்து ஏன் வளையல்களை வரவழைக்க வேண்டுமென்று கேட்டார்." அதற்கு ஒரு பொறுப்புள்ள அமைச்சர் நம் நாட்டில் வளையல் செய்வதற்கேற்ற விஞ்ஞானிகள் கிடைடாது என்று சொல்லுகிறார்.

கணவன் மனம் மகிழ மாதர்கள் வளையல்களாலும் ஆபரணங்களாலும் அழகு செய்துகொள்வார்கள்.

கோவலன் உளம் களிக்க கண்ணகி ஆபரணங்கள் பூண்டு கைகளிலே சங்கு வளையல்களை அணிந்திருந்தாள் அந்த காலத்தில் நம் நாட்டில் வெண் சங்கால் வளையல் செய்தார்கள் என்று வரலாறு கூறுகிறது. அது தான் பாண்டியன் நெடுஞ்செழியன் ஆண்ட காலம். நம் நாடு வளம் பெற வேண்டுமானால் நம் நெடுஞ்செழியன் ஆட்சி மலர வேண்டும்.

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் அன்று ஆண்டான். சேரன் செங்குட்டுவன், சீரும், சிறப்போடு நம் நாட்டை—நம் திராவிடத்தை அன்று ஆண்டு வந்தான், நம் புகழ் ஓங்கிற்று. அயல் நாடுகளிலெல்லாம் நம் மாண்பு பரவியது. அன்றிருந்த ஆட்சியை மலரச் செய்ய அரும பாடுபட்டு வருகிறோம்.

இலங்கைத் தீவில் சமீபத்தில் நடந்த ஒரு சம்பவத்தை கூறி உரையை முடித்துக் கொள்கிறேன் இலங்கையில்ஒரு அம்மையார் இருந்தார்கள். அவர் கணவனை இழந்தவர் அவருக்கு மூன்று குழந்தைகள் இருந்தது! மூத்த பையனுக்கு வயது 13. இரண்டாவது பையனுக்கு வயது 10. மூன்றாவது குழந்தைக்கு வயது 6 மூன்று குழந்தைகளும் பள்ளிக்குப் போய் விட்டார்கள்! அன்று மழை சோவென்று பெய்கிறது! தாயாருக்கு கவலை பிறந்து விட்டது. நம் குழந்தைகள் எவ்வாறு வீடு வந்து சேர்வார்கள். மழை இவ்வாறு பெய்கிறதே என்று கவலைபட்டு பள்ளிக்குச் சென்றார்கள்.

செல்லும் வழியில் ஒரு கால்வாய். அதிலே அலைமோதிக் கொண்டு தண்ணீர் செல்கிறது. அம்மையார் கால்வாயின கரையில் செய்வதொன்றும் அறியாது நின்றுவிட்டார்கள். அதற்குள் குழந்தைகளும் அக்கரையில் வந்து நின்றார்கள் தாயார் தன் கையை நீட்டியவுடன் 13 வயது பையன் இக்கரைக்கு தாவிவந்து விட்டான். அதேப் போல் 10 வயது பையனும் இக்கரைச்கு வந்து விட்டான், 6வயது குழந்தையைக் இக்கரைக்கு கொண்டு வந்தவிட்டதும் அம்மையார் கால் தவறி கீழே விழுந்து விட்டார் தண்ணீரில் விழுந்த தாயைக் காப்பாற்ற மூத்த பையன் நீரில் குதித்தான், 10 வயது பையன் சகோதரனை காப்பாற்றவும், தாயைக் காப்பாற்றவும் தண்ணீரில் குதித்தான், 10 வயது பையனும் கால்வாயோடு செல்கிறான். 6 வயது குழந்தையும், தாயைக் காப்பாற்ற நீரில் குதித்தது அதுவும் உயிர் நீத்தது. நண்பர்களே! 6 வயது குழந்தை தாயைக் காப்பாற்ற நீரில் குதித்தது நம் தாய் நம் தமிழ் தாய் இன்று அடிமையாக விலங்கிடப்பட்ட கரங்களோடு இருக்கிறார்.

அன்னையின் விலங்கை தகர்த்தெறிய நம் ஆட்சிமலர, இந்தி வெறியர்களுக்கு நல்ல புத்தி புகட்ட நம்நாடு விடுதலை பெற வாரீர் வாரீர் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

வணக்கம்

எங்கும் பரபரப்பு! பத்திரிகை உலகில் புரட்சி.!!
16வது இதழ் விற்பனையாகிறது!

நாத்திகம் இராமசாமியின் பித்தலாட்டத்திற்கு
மரண அடி!

கோசல்ராமின் கோணல்புத்தி!

நிதியமைச்சர் சுப்பிரமணியப் பண்டாரத்தின்
பின்புத்தி!

புரட்சி நடிகருக்கு எதிராக 'சதி'

அமைதியைக் கெடுக்கிறார் அழகேசன்!

ஒவ்வொரு இதழிலும் திருவை ஆ. அண்ணாமலையின்
புரட்சிகர அரசியல் கட்டுரைகள் உண்டு.

எங்கும் விற்பனையாளர்கள் தேவை!
நிர்வாகி, 'செங்கதிர்'
விலை 13 காசு 69, சாமிப்பிள்ளை தெரு.
சென்னை-7.

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி.எஸ். இளங்கோ கல்விப் பிரகாசம் பிரஸ்,
404 திருவல்லிக்கேணிஹைரோடு, சென்னை-5 அலுவலகம்: 1-35, வாணியர் தெரு. சென்னை-14.